Registered No. M. 878.

# பூர்ணசந்திரோதயம்.

**A Tamil Monthly Journal**

*Devoted to Theosophy, Religion,*

*Science, Art and Civilization*


| தொகுதி 5 | 1915ஞு மார்ச்சுமீ 15உ<br>ஆனந்தஞு பங்குனிமீ 2உ | பகுதி 11 |
|---|---|---|


அ. ரங்கஸ்வாமி ஐயர், B.A, B.L., F.T. S, பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2.                    தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

## பொருளடக்கம்.

## CONTENTS.


பக்கம்.

1. தற்கால நிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர். 401
From the Editor—A. Rangaswamy Iyer.

2. வருங்கால லக்ஷியங்கள்—ஸேவாநந்தன். 408
Ideals of the Future—Sevananda.

3. ஆத்மபோதம்— யோகி சுந்தரராஜம். 412
Atma Bodham—Yogi Sundararajam.

4. ஜாதிவேற்றுமை ஏற்பட்டவிதம்—M. ஸ்வாமிநாதையர் 417
Caste System--Attangudy M. Swaminatha Iyer.

5. முடிவும் மார்க்கமும்— ஆத்தங்குடி P. குமரப்பசெட்டி. 421
The Goal & the Path-Attangudy P. Kumarappa Chetty

6. சமாசாரம்—ஸேவாநந்தர். 425
News Sevananda.

7. சிறுவர்க்குரிய விஷயம்—வஸந்தாநந்தர். 433
Children's Corner—Vasanthananda.

8. தியானக்கிரம விஷயம்—K. S. இராமசந்திர ஐயர். 437
Meditations—K. S. Ramachandrier.


---


## *Ready for Sale.*

*The English Translations of:—*

**Thirty Minor Upanishads Rs. 3-8-0**

**Laghu Yoga Vasishta Rs. 2-0-0**

**Professor Bergson & the Hindu Vedanta Rs. 0-1-0**

**without postage.**

The above Upanishads, except one or two have never before been published in a book-form. Please apply to:—

**K. Narayanasamy Iyer Esq.,**

Theosophical Society, Adyar, Madras.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR : MADRAS-41
393

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 5 } 1915௵ மார்ச்சு௴ 15௳ ஆனந்த௵ பங்குனி௴ 2௳ { பகுதி 11

## தற்கால நிலைமை.

சென்ற பிப்ரவரி மாசம் 19-ம் தேதி கோபால கிருஷ்ண கோகலே என்ற இந்திய தேசாபிமானி காலம் சென்றார். அவர் சில காலமாக வியாதியிலிருந்தபோதிலும் தேசபொது நன்மையை நாடிச்செய்து வந்த வேலைகளைக் குறைவின்றி கடைசி வரையில் நடத்தி வந்தனர். இந்தியாவுக்கு ராஜரீக விஷயங்களில் அவர் செய்த கைங்கரியமானது சென்ற 12 வருஷங்களாக எல்லோராலும் நன்றாகத் தெரிந்துகொள்ளப்பட்டதன்றோ? அவர் இறக்கும் காலத்தில் பொது நன்மையைக்கருதி இத்தேசத்தில் உழைத்த இந்திய தலைவர்களுக்குள் ஒரு உன்னதமான பதவியை அடைந்து ஆங்கிலேயர்களால் நன்கு மதிக்கப்பட்டும் அவருடைய ஸ்வதேசத்தாரால் விசுவாசத்துடன் கொண்டாடப்பட்டும் வந்தனர். அவருடைய வாழ்க்கையால், இத்தேசத்தில் வசிக்கும் எல்லோருக்கும் பொது நன்மையில் உழைப்பதற்கு அநுகுணமான உயர்தர நோக்கங்கள் கைக்கொள்ளத் தக்கன.

* * *

அவர் பம்பாய் ராஜதானியில் கோலாப்பூர் என்ற ஊரில் 1866ம் வருஷத்தில் ஒரு ஸாமான்ய மகாராஷ்ட்ர பிராமண குடும்பத்தில்

ஜனித்து அவ்வூரில் பால்பத்தில் கல்வி கற்று 1884ம் வருஷத்தில் பம்பாய் சர்வகலாசாலையில் பி. ஏ. பரீக்ஷை தேறினர். மகாராஷ்ட்ரத்தில் பிரதான நகரமான பூனா நகரில் தேசாபிமானத்திலும் மேதையிலும் கல்வியிலும் பிரஸித்தி பெற்றவர் சிலர் அக்காலத்தில் தக்ஷிண கல்விச் சங்கம் (Deccan Education Society) என்ற சபையை ஸ்தாபித்து, பேர்குஸன் காலேஜ் என்ற வித்தியாசாலையையும் ஸ்தாபித்தனர். அச்சபையின் அங்கத்தினராக கோபால கிருஷ்ண கோகலே சேர்ந்து மேற்சொல்லிய வித்யாசாலையில் மாதம் 1க்கு ரூ. 75 வீதம் சொற்ப சம்பளம் பெற்று சிலவருஷகாலம் உபாத்தியாயராகக் கல்வி கற்றுக்கொடுக்க ஒப்புக்கொண்டனர். அச்சபையின் அங்கத்தினர்கள் கல்வியைப் பரவச்செய்வதற்காக அவ்விரதத்தைக் கைக்கொண்டு வந்தனர். அக்கல்விச் சாலையில் முதலில் ஆங்கிலேய பாஷை உபாத்தியாயராயும் பிறகு கணித உபாத்தியாயராயும் பிறகு சரித்திரம் பொலிடிகல் எகாநமி என்ற சாஸ்திரங்களைக்கற்பிக்கும் உபாத்தியாயருமாகி அவர் வேலை புரிவதாக ஒப்புக்கொண்ட காலத்தைக் கழித்தனர். அந்தக் காலத்தில் பூனா ஸர்வஜன சபையின் காரியதரிசியாகவும் அச்சபையால் மூன்று மாதத்திற் கொருதரம் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகையின்பத்திராதிபராகவும்இருந்து பொது நன்மைநாடி இராஜாங்கசீர்திருத்த விஷயமாக ஜனங்களால் நடத்திவரப்பட்ட எல்லா பிரவர்த்திகளிலும் பிரதானமான கைங்கரியங்களைச் செய்து வந்தனர்.

* * *

பம்பாய்மாகாண ராஜரீக சீர்திருத்தசபை (Bombay Political Conference)யின் காரியதரிசியாகவும் பிறகு பம்பாய் சட்டநிரூபண சபையின் அங்கத்தினராகவும் வேலை செய்தனர். முன் வருஷங்களில் கியாதி பெற்ற தேசாபிமானியும் ராஜரீக விஷயங்களிலும் அவைகளைச் சார்ந்த சாஸ்திரங்களிலும் தேர்ச்சியடைந்து கடைசியாய் பம்பாய் ஐகோர்ட்டு ஜட்ஜியாயுமிருந்த மகாதேவ கோவிந்தரானடே என்பவருடைய ஸகவாஸத்தின் நற்பயனாகவும் அவருடைய நற்போதனையாலும் கோகலே என்பவர் அவ்விஷயங்களைத் தாமும் கற்றுணர்ந்து அவைகளில் நிபுணராகி 1897ம் ௵த்தில் ஆங்கிலேய தேசத்திற்குச் சென்று இந்தியாவிற்கும் ஆங்கிலேய தேசத்திற்கும்

பணச்செலவு சம்பந்தமான கணக்குகளைப் பரிசோதிக்க ஏற்படுத்தப் பட்ட வேல்பீ கம்மிஷனில் மிகப்பிரயோஜனகரமான சாட்சியத்தைக் கொடுத்தார்.

***

கவர்னர் ஜனரலவர்களின் சட்டநிருபண சபையென்ற (Indian Imperial Council)ல் அங்கத்தினராயிருந்த ஸர்பிரோஸ்ஷா M. மேத்தா என்ற பார்ஸி தேசாபிமானியானவர் 1902ம் வருஷத்தில் அதினின்று விலகும் காலத்தில் கோகலே அச்சபையின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அச்சபையில் சென்ற 12 வருஷங்களாக அவருடைய உழைப்பாலும் விவேகத்தாலும் நிர்ப்பயமாய் எடுத்துரைக்கும் திறமையாலும் சுயநன்மையைப் பாராட்டாமல் தேசநன்மையைக் கருதும் குணத்தாலும் உன்னதமான நிலைமையை அடைந்தனர். அவர் அநேக சீர்திருத்தங்களை உண்டாக்கவேண்டுமென்று முயன்றார். முக்கியமாய் அவிவேக அந்தகாரத்தை நிவர்த்தித்து பல விதங்களிலும் நாகரிகத்தைப் பரவச்செய்யக்கூடியதாகிய கல்வியை இந்தத்தேசத்தில் எந்த அந்தஸ்தில் பிறந்த பையனும் கட்டாயமாய் அப்பியாஸம் செய்யத்தக்கவாறு ராஜாங்கத்தாரிடத்தில் ஓர் பொறுப்பை ஏற்படுத்தக்கூடிய எலிமேண்ட்ரி எடுகேஷன்பில் என்ற மஸோதா சட்டத்தை இந்திய சட்ட நிருபண சபையில் கொண்டு வந்தார். அது ஊர்ஜிதத்திற்கு வரத்தவறிவிட்டாலும் அதின்மூலமாகக் கல்வியை தேசமுழுவதும் பரவச்செய்ய வேண்டுமென்று ஆவலும் ஊக்கமும் இராஜாங்கத்தாரிடத்தில் அதிகரித்து இப்போது சில வருஷங்களாய் அவ்விஷயத்தில் அதிகதிரவியச்செலவு இராஜாங்கத்தாரால் செய்து வரப்படுகிறது.

***

தவிரவும் அவர் தென் ஆபிரிக்காவுக்குச் சென்று அங்கு இந்தியர்களுக்கும் வெள்ளைக்காரர்களுக்கும் ஏற்பட்ட தாவாக்கள் திருப்திகரமாய் முடிவதற்குத் தக்க முயற்சி செய்தார். தவிரவும் ஆங்கிலேய தேசத்திற்குப் பலகால் சென்று இத்தேசத்தார்களுக்கு ஸாதகங்களைச் செய்திருக்கிறார். இந்தியன் பப்ளிக் ஸெர்விஸ் கம்மிஷனில்

இவர் ஒரு அங்கத்தினராகவிருந்து அந்த கம்மிஷன் இந்தியாவில் பல இடங்களில் விசாரணை செய்தகாலத்தில் இந்தியர்களின் நன்மையைக் கைப்பற்றுவதையே ஒரு கங்கணமாய்க்கொண்டு ஜாகரூகராய் வேலை செய்து வந்திருக்கின்றனர். அந்த கம்மிஷனுடைய ரிப்போர்ட்டு முடியும் காலத்தில் அவர் காலஞ்சென்றது இந்தியாவிற்கு ஒரு நஷ்டமே.

***

அவரது ஞாபகத்தை இந்தியர்கள் மனஸில் கொள்ளவும் இந்தியாவிற்கு ராஜாங்க சீர்திருத்தம் முதலிய விஷயங்களில் அவருக்குப் பிறகு அவர்போல் உழைப்பவர்களை உண்டாக்கவும் அவர் ஏற்படுத்திய இந்தியாவுக்குக் கைங்கரியம் புரிவோர் சங்கமே * ஒரு கருவியாகும். இவ்விந்துதேச சரித்திரத்தில் மகான்கள் பலர்தோன்றி ஜனங்கள் இகபர விஷயங்களில் மேம்பாட்டையடைய ஸந்நியாஸத்தைக்கைக்கொண்டு உலகத்தில் மனிதர்கள் மேன்மைபாகக் கருதி நாடுகின்ற தனம் கீர்த்தி செல்வாக்கு முதலிய சுயநன்மைகளைத் துறந்து உழைத்திருக்கின்றனர். இவ்விதமுயற்சிகள் பெரும்பாலும் மதவிஷயங்களிலும் தத்துவ விசாரங்களிலும் சென்றிருக்கின்றன.

***

அவ்வித மார்க்கத்தை இராஜாங்க சீர்திருத்தவிஷயத்தில் அநுஸரித்தவர்களில் கோகலே முக்கியமானவராயிருக்கின்றார். அவரை அவ்விஷயத்தில் முயன்ற ஒரு கர்மயோகியென்றே சொல்லலாம். அவர்போன்ற கர்மயோகிகளைப் பழக்குவதற்கே அச்சபை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதென்று நாம் சொல்லத்தகும். மதவிஷயமாயிருந்தாலும் சரி, தத்துவ விசாரமாயிருந்தாலும் சரி, மனிதர்களுக்கு லௌகிக விஷயங்களில் நன்மைபுரிவதாயிருந்தாலும் சரி, எவ்வித நன்மார்க்கத்திலும் ஸ்வப்பிரயோஜனத்தை இச்சிக்காமல் உழைப்பதே கர்மயோகமாகும்.

***

(Theosophical Educational Trust) என்ற சங்கத்தாரால் மதனப்பள்ளியில் ஒரு ஹைஸ்கூல் நடத்திவரப்படுகின்றது. அந்த ஒரு

* Servants of India Society.

காலேஜாகச் செய்ப முயற்சி செய்யப்பட்டு வருவதில் சென்னை சர்வ கலாசாலை (Madras University) யின் நிர்வாக சபையோர் (Syndicate) அவ்விதம் செய்யலாமென்று மேற் சொல்லிய சர்வ கலாசாலை சங்கத்தாருக்கு (Senate) சிபார்ஸை செய்திருந்தனர். நாளது மாசம் 5, 6 தேதிகளில் அவ்விஷயத்தைக்குறித்து அச்சங்கத்தார் ஆலோசனை செய்ததில் அவ்விதம் செய்யலாமென்று அவர்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

***

உலகத்தில் இந்தக் காலத்தில் பலமாறுதல்களைப் பார்க்கின்றோம். இப்பொழுது நிகழ்கின்ற யுத்தத்தின் முடிவில் ஐரோப்பா கண்டத்திலும் அதைச்சார்ந்து அதின் ஆளுகைக்குட்பட்ட இதர தேசங்களிலும் நூதன அமைப்புடன் கூடிய ராஜ்ய பிரிவுகளைப்பார்க்கப் போகிறோமென்று சிலர் சொல்லுகின்றனர். ஐரோப்பா கண்டத்தின் படமானது மாறி நூதனமாக வரையப்படுமென்று சொல்லப்படுகிறது. ஆங்கிலேய தேசத்திற்கும் அதைச் சேர்ந்த குடியேறின நாடுகளுக்கும் (Colonies) இந்தியாவிற்கும் ஏற்பட்டிருக்கிற தற்கால சம்பந்தங்களின் பாவங்கள் மாறி அவைகளுக்குள் ஏற்பட்டிருக்கும் ஐகமத்யம் அதிகரித்து பிரிட்டிஷ் ராஜ்யமண்டலம் மேல் நோக்கிச் செல்லத் தக்கதென்று சிலர் சொல்லுகின்றனர். இப்பொழுது ஆங்கில தேசத்தில் பரோபகாரச் செய்கைகளும் பிறருக்குப் பிரயோஜனமாயிருக்கக் கூடியகைங்கரியங்களும்நிகழும் யுத்தத்தின்பயனாக அதிதீவிரமாய் கைப்பற்றிவரப்பட்டிருக்கின்றன. யுத்தத்தினால் காயப்பட்டவர்களின் துன்பங்களையும் கஷ்டங்களையும் நிவர்த்திக்க ஏற்பாடுகளைச் செய்யவும், அதாவது ஆஸ்பத்திரி முதலானவைகளை அமைக்கவும்,பட்டாளத்தில் சேர்ந்து யுத்தம் புரியும் சைன்னியங்களுக்கு உடை ஊண் முதலியவைகளில் குறைவு படாமல் வேண்டிய சௌகரியங்களைச் செய்யவும், அப்படி போரில் பிரவர்த்தித்திருக்கின்ற சிப்பாய்களின் குடும்பங்களின் யோகக்ஷேமங்களை, வகிக்கவும் பெல்ஜியம் தேசத்திலிருந்து வெளியேறி இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்திருக்கும் பெல்ஜியர்களுக்கு நல் வரவுகூறி உபசரித்து அவர்களுக்கு வேண்டிய உபகாரங்களைச் செய்யவும் பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகிறபடியால், தான், தனது என்ற

எண்ணம், மாறி பிறருக்கு என்ன செய்யத்தக்கது? எவ்வழிகளால் அவர்கள் கஷ்டத்தை நீக்கலாம்? என்ற எண்ணம் பலமடைந்து வருகிறது. சட்டங்களும் பல வழிகளாக ஜனங்களுடைய துக்கத்தையும் தரித்திரத்தையும் எவ்வாறு நிவர்த்தித்து அவர்கள் சுகத்தையும் பொருளையும் எவ்வாறு அடையலாம் என்பதற்கு அநுகுணமான வழிகளைத் தேடிவருகின்றன. Mr. லாயிட் ஜார்ஜ் என்ற மந்திரியினால் கொண்டுவரப்பட்ட சட்டமாறுதல்கள் இதையே கருத்தாக நோக்கிக் கொண்டிருக்கின்றன.

***

இதுவரையில் மதம், கல்வி, ஆசாரம், ராஜரீகம் முதலிய விஷயங்களில் வழங்கிவந்த ஏற்பாடுகள் தற்கால ஸ்திதிக்குப் பொருந்தாதவைகளாய் இனி வருங்காலங்களுக்குத் தக்க பலவித மாறுபாடுகளை அமைக்கப் பெறுகின்றன. தேசங்களில் விற்பனையாகும், ஜனங்களுக்கு அவசியமான சாமான்களின் கிரயம் அந்தந்தக் காலத்தில் சாமான்கள் கையிருப்பிலிருப்பதையும் அதினுடைய தேவையையும் பொறுத்து இருக்கத்தக்கது. அக்கிரயம் ராஜாங்க அமுலால் மாற்றத்தக்கதில்லை என்பதே ஆங்கிலேய தேசத்தில் பெரும்பாலும் அங்கீகரிக்கப்பட்ட நாணயசாஸ்திரிகளின் (Political Economists) கொள்கையாயிருந்தது. யுத்தத்தின் நிர்ப்பந்தத்தால் கிரயம் வாங்குவோர்களிடமிருந்து ராஜாங்கத்தாரால் குறிப்பிட்ட கிரயத்திற்கு மேல் வியாபாரிகள் வாங்குவதைத் தடுப்பதற்குரிய விதிகள் ஏற்படத் தக்கதென்ற கொள்கை கைப்பற்றப் பட்டுவருகின்றது. பார்லிமெண்டில் இருக்கும் பல கக்ஷியார்களும் ஒன்று சேர்ந்து ஒரேமுகமாய் நின்றுகொண்டு தேசத்திற்கு விரோதமாய் போர்புரியும் சத்துருவை எதிர்ப்பதில் அபிப்பிராய பேதமின்றி ஒற்றுமையுடன் இருக்கிறார்கள். ஜகத்குருவின் அவதாரமானது மனிதர்களுக்குள் அன்பின் பெருக்கையும் சகோதரபாவத்தின் அபிவிர்த்தியையும் சூசிப்பதால் யுத்தமுகத்தினின்றும் இந்நன்மைகள் உண்டாகுந்தன்மை கள்ளிவயிற்றில் அகில் பிறக்கும் தன்மைபோல் ஆச்சரியப்படத்தக்கதொன்று. இந்தியாவிலும் அவ்விதம் மாறுதல்களை நாம் பார்க்கிறோம். நூற்றாண்டுகளாலும் ஸகஸ்ர வருஷங்களாலும் நமக்குப் போதுமானதாயிருந்த விதிகளும் வழக்கங்களும் இக்காலத்திற்கு

முன்போல் ஒத்திருக்கவில்லையென்ற எண்ணம் ஜனங்களின் மனதில் இங்குமங்கும் தோன்றிக் கொண்டிருக்கிறது. அவைகளைக் கால இயற்கைக்குத் தக்கனவாய் மாற்ற சக்தியிலும் அன்பிலும் ஞானத்திலும் சிறந்த ஒருவருடைய சன்னிதானம் நேர்ந்தால் மட்டில் அப்பயனையடையலாம் என்று தோன்றுகிறது. ஒருக்கால் இச்சம்பவங்கள் அவர் வரவை முன் அறிவிக்கும் அறிகுறிகள்போல் காணப்படுகின்றன.

***

இக்கால இயற்கைக்குத் தக்கவாறு பிரஹ்மஞ்ஞான சபையின் பஹிர் பிரவர்த்திகளும் முன்னிருந்தாற்போல் சில விஷயங்களில் மட்டும் செல்லாமல் காம்பீர்யத்தையும் விரிவையும் அடைந்து பல வழிகளில் சென்று கொண்டு வருகின்றன. இதற்கு முன் மதவிஷயங்களிலும் கல்வியைப் பரவச்செய்வதிலும் ஊக்கத்துடன் முயன்று வந்தது போல் இப்போது ஆசார சீர்திருத்தத்திலும் வியாபார கைத்தொழில் அபிவிர்த்தியிலும் இராஜாங்க சீர்திருத்தத்திலும் இச்சபையின் மெம்பர்களில் பெரும்பான்மையோர் இத்தேசத்தில் முயன்று வருகின்றனர். இச்சபையின் அக்கிராஸனாதிபதியவர்களின் நாநாவித முயற்சிகளே இதற்கு ஒரு சாக்ஷிய மாகும்.

***

தென் இந்தியா கன்வென்ஷன், ஈ. எஸ். கான்பரன்ஸ் மீட்டிங்குகளின் நோட்டீஸ்:—தென் இந்தியாவிலுள்ள பிரஹ்மஞ்ஞான சங்கத்தின் கிளைச்சபைகளின் இரண்டாவது வருஷக் கூட்டமும், ஈ. எஸ். கான்பெரன்ஸ் மீட்டிங்கும் வருகிற ஏப்ரல்மீ 2உ முதல் 5உ முடிய ஈஸ்டர் விடுமுறை நாட்களில், அடையாற்றில் நடைபெறும் கூட்டத்திற்கு வர உத்தேசிக்கும் மெம்பர்கள் "சென்னை, பூந்தமல்லி ஹைரோட்டு, "பங்களூர் வில்லா"விலிருக்கும், ஐகோர்ட்டு வக்கீல் மிஸ்டர். வி. எஸ் கோவிந்தராஜ முதலியாரவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஜாகை விஷயமாக, அடையாறு போஜனசாலை சூபரிண்டெண்டெண்டு மிஸ்டர். J. சீனிவாசராவ் அவர்களுக்கு முன்னடியே எழுதி அவர்மூலம் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். கீற்றுப்போட்ட அறைகள் (12 அடி × 9 அடி) (பாயுடன்) 10 ரூ. (பாயில்லாமல்) ரூ 9 அணா 8. பிப்ரவரிமீ 28உ க்குள், மிஸ்டர் J. சீனிவாசராவ் அவர்களுக்கு மெம்பர்கள் இனம் 1-க்கு 1ரூபா. கட்டணம் அனுப்பினால், ஒரு பொதுக்கொட்டகை போடப்படும்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

## வருங்கால லக்ஷ்யங்கள். *

### ஸமூஹ வாழ்க்கை (Society.)

---

இந்தப் பத்திரிகையின் முந்திய ஸஞ்சிகை ஒன்றில், பிரத்தியேகத்துவம் (Individuality) என்னும் தன்மையைப் பற்றி எழுதியிருக்கிறோம். *அந்த வேற்றுமைத் தன்மையானது விசேஷமாய் பலப்பட்டதின் பயன் என்னவென்றால், ஜனஸமூஹத்திலுள்ள ஜீவர்கள் ஒருவரோடொருவர் போராடி ஜீவனம் செய்கிறதென்ற ஒரு ஸ்திதி நடைபெற ஆரம்பித்தது. அவ்விதமான போராட்டத்தில் (Competition) எந்த ஜீவர்கள் புத்தியிலும் பலத்திலும் தாக்ஷண்யமின்மையிலும் மேலிட்டிருக்கிறார்களோ, அவர்கள் தான் முன்னுக்கு வருகிறார்களே தவிர மற்றவர்கள் அடங்கிவிடுகிறார்கள். வேகம் ஜாஸ்தியுள்ளவன் தான் பந்தயத்தில் கெலிப்பான். பலம் அதிகமுள்ளவன் தான் சண்டையில் ஜயிப்பான். மந்தமானவனும் பலஹீனமானவனும் மிதிபட்டுத்தான் போவான். ஆனால் இவ்விதமான போராட்டத்தில் மனஉறுதி, விடாமுயற்சி, பிடிவாதம், தைரியம், பொறுமை, முதலான அநேக உபயோகமுள்ள குணங்கள் பயிற்சி அடைகின்றன. வியஷ்டியில் தனியாகப் பார்க்கும்பக்ஷத்தில் சில ஜீவர்கள் பிரத்தியேகத்வத்தினால் அபிவிருத்தியடைகிறார்கள் என்பதில் தடையில்லை. ஜனஸமூஹத்தை ஸமஷ்டியில் மொத்தமாகப் பார்க்கும்பக்ஷத்திலோவென்றால் எந்த ஸமூஹத்தில் ஒவ்வொரு ஜீவனையும் அந்த ஸமூஹத்தினுடைய அம்சமாகவாவது, அங்கமாகவாவது, பாவிக்காமல் ஒவ்வொரு ஜீவனுடைய லாபநஷ்டமும் வெவ்வேறாக நினைத்து நடக்கிறார்களோ, அந்த ஸமூஹமானது நிலைத்திராது. சரீரத்தின் ஒரு அங்கத்தில் ஒரு புண் உண்டானால் அதனால் காணும் ஜ்வரம் சரீரத்திலுள்ள எல்லா அங்கங்களிலும் வியாபிக்கிறது. சரீரத்தினுடைய பொது நன்மையை உத்தேசித்து எல்லா அங்கங்களும் ஒத்துவேலை செய்யாவிட்டால், எப்படிச் சரீரம் மெலிந்து குலைந்து போகுமோ, அப்படியே அந்த ஜனஸமூஹமும் க்ஷீணித்துப்போம்.

---

*நக்ஷத்திர தூதன் (Herald of the Star) என்னும் ஆங்கிலபத்திரிகைக்கு ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரால் அனுப்பப்பட்ட வியாஸம் தமிழில் எடுத்தெழுதப்பட்டது.

ஜீவனானது ஈசுவரனுடைய அம்சமாகையாலும், ஈசுவரத்தன்மையானது ஜீவர்களிடத்தில், படிப்படியாய் விகாஸத்தை அடைந்துவருகிறபடியாலும், அவ்விதமான போராட்டத்தில் மற்றவர்களுடைய ஐசுவரியங்களைக் கவர்ந்து தாங்கள் முன்னுக்குவந்த ஜீவர்கள் தங்களால் மற்றவர்களுக்குத் தீங்கு நேர்ந்து அவர்கள் மெலிந்து போனதைப் பார்த்துக் கருணைகூர்ந்து அநுதாபப்பட்டு தாங்கள் சேகரித்த பொருளைத் திரும்பவும் பொதுஜனகைங்கரியங்களில்விநியோகப்படுத்துகிறார்கள். இப்படிச் சிலகாலம் சென்றபின், பெரும்பான்மையோருக்குப் போதுமான அளவு புத்தி விகாஸமானவுடன், பிறருக்கு நாம்தீங்கை உண்டுபண்ணி அப்பால் அதை ஆற்ற வழிதேடுவதைக்காட்டிலும், ஒருவருக்கும் தீங்கே உண்டாகாமல், வாழ்ந்துவர ஏதாவது மார்க்கத்தைக் கண்டுபிடித்தால் ஸௌகரியமாக விருக்கும் என்று ஒரு உணர்ச்சி உண்டாகும். ஜனஸமூஹ வாழ்க்கையை எவ்விதமாக ஒழுங்குபடுத்தலாம் என்ற ஆலோசனை உண்டாகும். பிரத்தியேக வாழ்க்கையால் தீங்கை அடைந்தவர்கள் மாத்திரம்அல்ல, அந்தத் தீங்கை விளைவித்தவர்களும் கூட பிரத்தியேக வாழ்க்கை இனி உதவாதென்ற நிச்சயமான நம்பிக்கையை அடைவார்கள். பிரத்தியேக வாழ்க்கையில் நிகழும் போராட்டத்தில் நொறுங்கிப்போகாமல் பலப்பட்ட ஜீவர்கள் கட்டிடம் கட்டுவதற்காகச் சேகரிக்கப்பட்ட கருங்கற்கள் போலும். இனி அந்தக் கற்களை ஐக்கியம் (Co-operation) என்னும் (Cement) சாந்தைக் கொண்டு ஒன்றாகச் சேர்த்து ஸமூஹவாழ்க்கை என்னும் கட்டிடமாகக் கட்டச் சமயம் வந்துவிட்டது. அந்த ஸமூஹவாழ்க்கையின் நோக்கம் யுத்தத்தில் அடிபட்டவர்களுக்குச் சிகித்ஸைசெய்து சுவஸ்தப்படுத்துவதுபோல வந்தபின் காப்பது அல்ல.

யுத்தமே உண்டாகாதபடி தடைசெய்து வருமுன் காப்பதை ஒக்கும். பிரத்தியேக வாழ்க்கையில்தேறினவர்கள் போராட்டத்திற் பொருளை ஸம்பாதிக்கும் வழியைத் தெரிந்துகொண்டார்கள். ஸமூஹவாழ்க்கையிலேயோ போராட்டமில்லாமல் பொருளை நியாயமாய் எல்லோரும் ஒத்து அநுபவிக்கும்படியான வழியைத் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. யுத்தத்தில் கொள்ளைக்காரர்கள் அவனவன் வல்லமைக்குத் தக்கபடி அவனவன் கையில் அகப்பட்டதை

அவனவன் வியாபித்துக் கொள்ளுவது போலாகும் பிரத்தியேக வாழ்க்கையின் முறை. ஸமூஹவாழ்க்கையின் முறையோ வென்றால் ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் குடும்ப சொத்துக்களை அவரவர்களுக்கு அவசியமான மட்டில் நியாயப்படி ஒற்றுமையாக அநுபவிப்பது போலாகும்.

எப்படி ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் யாவரும் குடும்பத்தின் க்ஷேமத்தையும் அபிவிருத்தியையுமே கோரினவர்களாய்ப் பொது நோக்கத்துடன் கூடியிருக்கிறார்களோ அப்படியே ஒரு ஜனஸமூஹத்திலடங்கியவர்கள் ஒவ்வொருவரும் தன்னுடைய ஸ்வயநயத்தைப் பாராட்டாமல் ஸமூஹத்தின் பொது நன்மையிலேயே நோக்கமுற்றவர்களாக இருக்கவேண்டும். ஜனஸமூஹமென்பது ஒருபெரிய குடும்பம் என்றே வைத்துக் கொள்ளலாம்.

எப்படி ஒரு குடும்பத்தில் மூத்தவர்கள், தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களை அன்புடன் ஆதரித்து உயர்நலம் அடையும்படி செய்கிறார்களோ, அப்படியே. ஒரு ஜனஸமூஹத்தில் அறிவிலும் அன்பிலும் அநுபவத்திலும் மிகுந்த பெரியோர்கள் தங்களுடைய ஸ்வயநயத்தைக்கருதாமல் மற்றவர்களை நல்வழிப்படுத்தவேண்டும். அப்படிப்பட்டவர்களைத் தெரிந்து. அவர்கள் காட்டும் வழியில் மற்ற ஜனங்களும் தவறாமல் நடக்கவேண்டும்.

ஜனஸமூஹத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய உடைமைகளைத் தங்களாலியன்ற அளவு பொது நன்மைக்கு அளிக்கவேண்டும். அவைகளை அபேக்ஷிப்பவர்களுக்குத் தேவை எவ்வளவோ அவ்வளவு. அப்படிச் செய்தால் மாத்திரம்ஸமூஹவாழ்க்கை நன்றாய் நடைபெறும். ஒரு குடும்பத்திலுள்ள பெரியோர்கள் தங்கள் உள்ளிட்டார்களை நல்வழிப்படுத்தவேண்டும் என்ற கவலை கொண்டு அவர்களைப் பலவழியாகவும் உத்சாஹப்படுத்தி அறிவிலும் நற்குணங்களிலும் தேர்ச்சி அடைவித்து உயர்நலம் அமையும்படி செய்வதைப் பார்க்கிறோம். ஜனஸமூஹமாகிய பெரிய குடும்பத்துக்கு அறிவிலும் அன்பிலும் நற்குணங்களிலும் குறைந்த வகுப்பார்கள்தான் குழந்தைகள்போலும். வித்வான்களாகவும், ஸத்குணசம்பன்னர்களாயும் உள்ளவர்கள் ஜநஸமூஹத்தின் சிறப்பைக்கோரி

அவரவர்களுடைய நிலைமைக்குத் தகுந்தபடி வேண்டிய பயிற்சிகளைக்கொடுத்து அவர்களிடமிருந்த குறைகளை விலக்கி அவர்களிடம் குப்தமாயுள்ள குணங்களையும் சக்திகளையும் விகஸிக்கும்படி செய்ய வேண்டும். ஸ்வபாவகுணம் வெளிப்படும் வரையில் தொடக்கத்தில் ஒவ்வொரு குழந்தைக்கும் பொதுவாயும் அவசியமாயுமுள்ள கல்வியைக் கற்பிக்கவேண்டியது. அப்பால் அதன் ஸ்வபாவக்குணத்துக்கு ஏற்றதொழிலைப் பயிற்சி செய்விக்க வேண்டியது. முற்காலத்தில் ஸ்வபாவக் குணத்தை அனுசரித்து ஜாதிகளும் ஜாதிக்குத்தகுந்த தொழிலும் ஏற்பட்டிருந்தபடியால் கற்பிக்கவேண்டிய தொழில் இன்னதென்று தீர்மானிப்பதில் கஷ்டமில்லாமலிருந்தது. ஆனல் இப்போது ஜாதிக்கும் குணத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. ஆகையால் அந்தந்த ஜாதிக்கு ஏற்பட்ட தொழிலைக் கற்பிப்பதில் பிரயோஜனமில்லை.

அவனவனுடைய ஸ்வபாவகுணத்தைசரியானபடிதெரிந்து அதற்குப்பொருத்தமானதொழிலைக்கற்பிக்காமல் ஏதாவதுவேருெருதொழிலைக் கற்பித்தால் அதில் அவன் பிரியமாய் நாடுகிறதில்லை. அவனுக்குத் திருப்தி யுண்டாகிறதுமில்லை. அவரவர்களுடைய ஸ்வபாவகுணத்துக்கும் இயற்கை வாசனை இசைந்த தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கற்பிக்கும் பக்ஷத்தில், பிற்பாடு அந்தத் தொழிலைச் செய்யும் போது மனச்சோர்வு இல்லாமல்குதூஹலத்துடன் வேலைசெய்வான். அதனல் ஒவ்வொரு தொழிலும் மேன்மேலும் தேர்ச்சியடையும். ஸமூகவாழ்க்கைகளில் ஒவ்வொருவரும் செய்யும் தொழிலின் பயன் ஜனஸமூஹத்துக்குச் சேர்ந்ததாளுபடியால் ஒருவனுடைய திறமையைப்பற்றி மற்றவர்களுக்குப் பொருமை உண்டாகமாட்டாது. எந்தவேலையானுலும் எப்படியாவது நன்ருகச் செய்யப்படவேண்டும் என்ற நோக்கம் மாத்திரம் இருக்குமே ஒழிய மற்றவர்கள் செய்வதைப்பற்றி அசூயை இராது. மற்றவர்களுடைய யோகக்ஷேமம் வேறு தன்னுடைய யோகக்ஷேமம் வேறு என்று நினைத்தால் மட்டிலும் ஒவ்வொருவனுக்கும் ஓயாதகவலையும் ஒழியாத வேலையும் ஏற்படுமே தவிர எல்லா ஜனங்களுடைய வேலையும் ஒன்றுபட்டிருக்கும் ஸமூஹவாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஏராளமான ஸாவகாசமும் மேன்மை அடையச் சாதகமான சௌகரியங்களும் உண்டாகும்.

இதுதான் வருங்காலத்தில் ஸமூஹ வாழ்க்கையின் லக்ஷ்யமாகும். பிரத்தியேக வாழ்க்கையில் பெருகும் அஹங்கையிலும், மமதையிலும் மூழ்கிக்கிடக்கும் நம்மால் அந்த லக்ஷ்யத்தின் மஹிமை இப்படிப்பட்டதென்று விவரமாய்ச் சொல்லவாவது அதனல் உண்டாகும் அனந்த வைபவங்கள் இவ்வளவென்று உள்ளபடி நிதானிக்கவாவது இப்போது ஸாத்தியமாகாது.

ஸேவாநந்தன்.

# ஆத்ம போதம்.

[வசிஷ்ட மஹரிஷியின் ஆச்சிரமம் போயிருந்தஸச்சிதானந்த யோகேந்திரர் வருகிறார்.]

தத்வராயன்:—ஹே! பரமகுருவே! எங்கள் நமஸ்காரத்தை ஏற்றுக்கொண்டு எங்களை ஆசீர்வதிக்கக் கோருகிறோம்.

யோகி:—ஹே! வத்ஸ! உன்னுடைய மனோபீஷ்டம் சித்தியை அடையட்டும். யான் வஸிஷ்ட மஹரிஷியின் ஆச்சிரமம் போயிருந்த காலத்தில் இவ்விடம் நமது ஆச்சிரமத்தில் நடந்த விருத்தாந்தங்களைப்பற்றிச் சுருக்கமாய்ச் சொல்வாய்.

தத்வ:—ஹே! குருநாதா! தங்களனுக்கிரஹத்தால் யாதொரு குறைவுமில்லாது எல்லாம் சரிவர நடந்தது. மஹான் நாரத மஹரிஷி இவ்வாச்சிரமம் வந்து 3 தினங்களிருந்து, அப்பியாஸ மார்க்கத்தின் 8 அங்கங்களாகிய "சுசி, ருசி, ஆசாரம், நியமம், நிஷ்டை, யோகம், சாதனம், ஞானம்" என்பவைகளைப் பற்றியும், வர்ணாச்சிரம தர்மத்தைப்பற்றியும், சங்க்ஷேபமாய்ச் சொல்லிவிட்டு, தேவேந்திரனால் பிரார்த்திக்கப்பட்டு சுவர்க்கலோகம் போய்விட்டார். சவிஸ்தாரமாய் தாங்கள் அநுக்கிரஹிப்பீர்களென்றும் சொன்னார். பிறகு யாதொரு விசேஷமுமில்லை.

யோகி:—மஹான் நாரத மஹரிஷி உங்களிடத்தில் திருப்தியடைந்து போனதைக்கேட்க மிகவும் சந்தோஷமடைகிறேன். அவர் சொல்லிய விஷயங்களை சவிஸ்தாரமாய் உங்களுக்குபதேசிக்க வேண்டியது அவசியமே. ஆயினும், தற்காலம் கீதா சுலோகத்திற்குப் புராணத்தை ஆதாரமாகக் கொண்ட தாத்பரியத்தின் மற்ற மூன்று விஷயங்களையும் சொல்லப்போகிறேன். கவனியுங்கள்.

இலை, புஷ்பம், பழம், ஜலம் என்ற நான்கு பதார்த்தங்களைப் பற்றிய கதைகளில், பகவான் இலையைச் சாப்பிட்டு, பக்தனின் இஷ்டத்தைப் பூர்த்திசெய்த விஷயத்தைச் சொன்னேன். இனியும், புஷ்பத்தை ஏற்றுக்கொண்டு அப்புஷ்பத்தைக் கொணர்ந்த கஜேந்திரனின் இஷ்டத்தைப் பூர்த்திசெய்த விஷயத்தைப்பற்றிச் சொல்லப் போகிறேன்.

முன்னொரு காலத்தில் ஹூஹூ என்ற கந்தர்வன், தனது கந்தர்வ ஸ்திரீகளுடன் வஸ்திரமில்லாமல் நிர்வாணியாக ஓர் தடாகத்தில் ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்தான். அப்பொழுது தேவலூர்என்ற மஹரிஷி அத்தடாகத்தின் சமீபம்வந்து ஸ்நாந சந்தியா அநுஷ்டானங்களைச் செய்ய யத்தனிக்க ஹூஹூ என்ற கந்தர்வன் தன் ஸ்திரீகளுடனிருந்த அலங்கோலத்தைப் பார்த்து, கோபமூண்டு, அவனைப்பார்த்து, "யாது காரணத்தால் இவ்விதம் செய்யத்துணிந்தாய்?" என்று கேட்டார், இவ்வாறு மஹரிஷி கேட்டதையும் மதியாது தன் ஸ்திரீகளுடன் உல்லாசமாகவே கிரீடை செய்துகொண்டிருந்தான். பிறகு இவ்விதம் சாஸ்திரவாதிகளுக்கு விரோதமாயும் பெரியோர்களை அவமதித்தும் நடக்கும் அந்த 'ஹூஹூ' என்னும் கந்தர்வனைப் பின்வருமாறு சபித்தார். "நீ ஜலத்தில் விசேஷப் பிரீதியுடனிருக்க விரும்பி சாஸ்திரவிதிகளைக் கடந்தும் பெரியோர்களை அவமதித்துமிருந்தபடியால், முதலைஜன்மத்தையடைந்து வெகுகாலத்துக்கு வருணபகவானுடைய ரிதுமத் என்னும் உத்தியான வனத்தில் ஓர்தடாகத்தில் வசிப்பாய்" என்றார். உடனே அம்மஹானுடைய சாபத்தின்படி ஹூஹூ என்ற கந்தர்வன் முதலை ஜன்மத்தையடைந்து மேலே சொல்லியபடி ஓர் தடாகத்தில் வாசஞ்செய்ய, அவனுடனிருந்த ஸ்திரீகள் கந்தர்வலோகம் போய்ச் சேர்ந்தார்கள். பிறகு, இவர்கள் புருஷனை விட்டுப்பிரிய மனமில்லாத உத்தமஸ்திரீகளா யிருந்தமையால், மஹரிஷியின் சாபத்தினால் உண்டான, பர்த்தாவின் பிரிவைத்தாங்க முடியாதவர்களாய், பரம துக்கத்தையடைந்து, தங்கள் பர்த்தாவின் ஆகமனத்தையே மநத்தில்கொண்டு சதா, பகவானை தியானம் செய்துகொண்டிருந்தார்கள். இது இவ்விதமிருக்க, இதேகாலத்தில் இந்திரத்யும்நன்என்ற பெயருடன் பாண்டிய தேசத்தை ஆண்டுவந்த அரசன், இயற்கையிலேயே மிகுந்தஅறிவும், தெய்வபக்தியு முள்ளவன். இவன் நாளடைவில், இராஜ்யம், புத்திரமித்திர களத்திராதிகள் இன்னும் இவ்வுலகத்தே தோன்றிமறையும் யாவும் அழியக்கூடியவைகளே யென்றும், பகவானுடைய பொற்பாத கமலங்களை இடைவிடாது தியானம் செய்வதால் ஒருவனடையும் பாக்கியமே அழியாத பெரும்பாக்கியமென்றும் எண்ணி, தன்னுடைய இராஜ்ஜியம் முதலான சகலசம்பத்தையும், தன் முதல்மந்திரியிடம் ஒப்புவித்து, தான் குலபர்வதம்

சென்று, ஜடைமுதலிய சாதுவேஷம் தரித்து தபஸ்வியாகி, மௌந விரதம்பூண்டு ஸ்ரீயப்பதியை இடைவிடாது தியாநம் செய்து வந்தான். அந்தச்சமயத்தில் மிகுந்த கீர்த்தியுள்ளவரும் மஹாதபஸ்வியுமான அகஸ்தியமஹரிஷி தன்னுடைய சிஷ்ய கோடிகளுடன், தெய்வச்செயலாக அவ்விடம் வந்தார். அப்பொழுது அரசன் தியாநசமாதியி லிருந்தநிமித்தம் வந்த மஹரிஷியையும் அவருடைய சிஷ்யகோடிகளையும் கவனியா திருந்துவிட்டான். இதைக்கண்ட மஹரிஷியானவர் கோபம்கொண்டு அவ்விடம்வந்த பிராஹ்மணோத்தமர்களைக்கண்டு வணங்காமலும், அவர்களுக் குவந்த பூஜை செய்யாமலுமிருந்த அரசனின் அவமதிப்பான நடத்தையைக் கண்டு வியந்து, ஹே! ராஜந்! நீயிவ்விதம் செய்யக்காரணம் யாது? என்று வினவலாயினர். அதையும் கவனியாதிருந்த படியால், கோபங்கொண்டு, "யானைபோன்ற ஸ்தப்தபுத்தி யுள்ளவனுயிருந்து பெரியோர்களை யவமதித்தபடியால் நீ, யானை ஜன்மத்தையடைவாய்" என்று சபித்தார். அந்தச்சாபத்தின்வலிமையால் அரசன் நிஷ்டைகலைந்து கண் விழித்துப் பார்க்கப் பெரியோர்கள் வந்திருப்பதைத் தெரிந்து கொண்டு அவர்களை வணங்கிநின்றான். ஆயினும் "சாபம் கொடுத்தபிற்பாடு நீ வணங்கி நின்றமையால் சிலகாலம் இச்சாபத்தை யநுபவித்துப்பிறகு உன் இஷ்டபூர்த்தியை யடைவாய். குலதர்மத்துக்கு விரோதமாயிருந்தாலும் நீ பகவானை தியானம் செய்துகொண்டிருந்தமையால் உனக்கு பூர்வ ஜன்மவாசனையானது, நீ யானையாயிருக்கும் காலத்தும் உண்டாகக்கடவது" என்று தயவுடன் சாபத்தின் கொடுமையை ஒருவாறு மாற்றி அங்கேயுள்ள ஆச்சிரமங்களுக்குப் போயினர். உடனே அரசனும் அம்மஹரிஷியின் சாபத்தின்படி யானை ஜன்மத்தையடைந்து அக்குலபர்வதத்தில் சஞ்சரித்து வந்தான். விஷயங்கள் இவ்வாறிருக்க, தேவராஜன் சபையில் வழக்கமாய்வரும் ஹூஹூ என்ற கந்தர்வன், சிலகாலமாக அவ்விடம் வாராததை தேவேந்திரன் தெரிந்துகொண்டு, அதைப்பற்றி விசாரணைசெய்ய, தேவலர் என்ற மஹரிஷியின் சாபத்தினால் அவன் முதலை ஜன்மமடைந்து வருந்துவதைத் தெரிந்துகொண்டு தமது ஆசாரியனுகிய பிருஹஸ்பதிபகவானை யழைப்பித்து ஹூஹூவின் துக்கத்தை நிவர்த்திக்குமாறு பிரார்த்தித்தான். உடனேபிருஹஸ்பதிபகவான் தேவேந்திரனுடையவேண்டுதலுக்காகவும் ஹூஹூ

வின் பத்தினிகளின் உத்தம குணத்துக்கும் பதிவிரதா தர்மத்துக்காகவும் இரங்கி தேவலர் என்னும் மஹரிஷியை அச்சாப நிவிர்த்தி செய்யும்படி வேண்டிக்கொள்ள, அம்மஹரிஷியும் கருணைபுரிந்து பின்வருமாறு மாற்றினர். "இது நீ தெரியாது செய்தகுற்றமாகையாலும்; உன் பத்திநிகள் மகா உத்தமிகளாகையாலும், இச்சாபமானது சீக்கிரமாக விலகக்கடவது. அதாவது உன்னைப்போல், மஹான்களை அவமதித்த குற்றத்துக்காக, ஓர் ராஜன் யானை ஜன்மத்தையடைந்து குலபர்வதத்தில் சஞ்சரிப்பான். அவன் தாகம் தீர்த்துக்கொள்ள நீ சஞ்சரிக்கும் தடாகத்துக்கு வருவான். அவன் மஹா பக்தனாகையால் அவன் பிரார்த்தனைக்கிணங்கி பகவான் சங்கு சக்கரதாரியாக அவனை ரக்ஷிக்கவருவார். ஆகையால் நீ அந்தபக்தனின் சரணங்களே கதியென்றிருப்பாயாகில் பகவான் உன்னையும் சாபத்தினின்று விடுவித்து, ரக்ஷிப்பார்." என்று புகன்றார்*. இந்தப் பிரதிசாபத்தின் வலிமையானது கஜேந்திரனுக்கு ஒருநாளுமில்லாத தாபத்தை யுண்டுபண்ண, அதைச் சகிக்கமுடியாமல், அது ஹூஹூ என்ற கந்தர்வன் முதலையாக வசிக்கும் தடாகத்தை நாடி, தன் பரிவாரங்களாகிய பெண்யானைக் கூட்டங்களோடும், யானைக் குட்டிகளோடும், வந்து தான் முதலில் அத்தடாகத்தி லிறங்கி தாகத்தைத் தீர்த்துக்கொண்டு பிறகு தன் பரிவாரங்களுக்கும் தண்ணீர்முகந்து கொடுத்துவிட்டுத் திரும்பிப்போக யத்தனிக்கும் போது அத்தடாகத்தின் நடுவில் அநேகமான தாமரைப் புஷ்பங்களிருக்கக்கண்டு, பூர்வம் தான் இச்சாபத்தை யடையுமுன் செய்துகொண்டிருந்த பகவத்ஞாபகம் வந்து, அப்புஷ்பங்களைக் கொய்து பகவதர்ப்பணம் செய்ய எண்ணங்கொண்டு தடாகத்தின் நடுவே செல்ல, ஹூஹூ என்ற முதலையால் அதன் சரணங்களில் ஒன்று பிடிக்கப்பட்டு, அது வெளியில் போகமுடியாமல் தடுக்கப்பட்டது. அக்காலத்தில் வெளியிலிருந்த யானைக் கூட்டங்களெல்லாம் ஒன்று கூடித் தடாகத்திலிருக்கும் கஜேந்திரனைப் பற்றிஇழுத்தும் கரையேற்ற முடியாததுகண்டு தத்தம் இருப்பிடம் போய்ச்சேர்ந்தன. இவ்விதம் தன்னினத்தாராலும் கைவிடப்பட்டுப் போனதின்மேல், தன்னைக் காப்பாற்றிக் கரையேற்றுபவன் அந்த ஸ்ரீயப்பதிதான்என்

* புகன்றார் - சொன்னார்.

பதை உறுதியாக அடைந்து, அதிபால்யரான "துருவன்," "பிரஹ்லாதன்" முதலிய மஹாஉத்தமர்கள் மூறையிட்டவண்ணம் பிரார்த்தனை செய்யத் துணிந்தான்.

𑌯𑍋𑌨𑍍𑌤𑌃𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯𑌮𑌮𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌸𑍍𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋𑌭𑌗𑌵𑌤𑍇𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯𑌤𑍁𑌭𑍍𑌯𑌂॥

மேலே சொல்லியபடி, பலவிதமாகப் பகவானைஸ்துதிசெய்ய, அவரும் கிருபையுடன் அவன் கொய்த புஷ்பங்களை கிரஹித்துக் கொண்டு அவன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்ய சாபத்தினின்றும் விடுவித்து அவன் பூர்வ ஜன்மத்தில் செய்த தபசுக்குப் பலனாக உத்தம கதியை அளித்தார். அப்பொழுது கஜேந்திரனின் சரணத்தை வெகுகாலமாகப் பிடித்துக்கொண்டிருக்கிற முதலை அந்தகஜேந்திரனின் சரீரத்தோடு சரீரமாகவிருப்பது கண்டு இதுவும் தேவலரின் சாபம்ஹிமையென்று தெரிந்துகொண்டு அதின் துக்கத்தையும் நிவர்த்தித்து தன் பத்தினிகளுடன் போய்ச்சேர்ந்து சுகமாய் வாழும்படி யநுக்கிரஹித்து கஜேந்திரனுக்குப் பிராமணர்களுக்கு * மேலான தெய்வமில்லையென்னும் விஷயத்தை நன்றாய்ச் சுட்டிக்காட்டித் தான் அந்தர்த்தானமாயினர்.

யோகி:—ஹே சிஷ்யமணிகளே! இதுவே பகவான் புஷ்பத்தை ஏற்றுக்கொண்டு பக்தனின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்தது.

யான் வசிஷ்ட மஹரிஷியின் ஆச்சிரமம் போயிருந்தபோது தனித்திருக்கச் சாவகாசமில்லாமலும் அநேகம் மஹான்களுடன் சம்பாஷிக்கவும் நேரிட்டமையால் இப்பொழுது தனித்திருக்க விரும்புகிறேன். நிஷ்டைகலையும்வரை இவ்வாச்சிரம விஷயங்கள் யாவற்றையும் நீங்களே கவனிப்பீர்கள். ஜாக்கிரதை! தெரியுமா!!

யோகி. சுந்தரராஜம்.

---

* பிரஹ்ம நிஷ்டர்களுக்கு,

409

# ஜாதிவேற்றுமை ஏற்பட்டவிதம்.

(384-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

இக்காலத்தில் தான், பரத்வாஜருக்கும் பிருகுவுக்கும் நடந்ததாக பாரதத்தில் கூறப்பட்டிருக்கும் சம்வாதம் ஏற்பட்டது. ஆதியில் ஒரே வருணமென்றும், அது பின்னிட்ட காலங்களில் படிப்படியாக எப்படியாயிற்றென்றும், அச் சம்வாதத்தால் நாம் அறியலாம். அன்றியும் வேதாந்த தேசிகர் அருளிச்செய்த ஓர் கிரந்தத்திலிருந்து மேற்கோளாக எடுத்துக் கூறுவதும் இதுவே.

இதைச் சீர்திருத்துவதற்காகப் பிற்காலங்களில் பல மகான்கள் அவதரித்து, ஜாதிவேற்றுமையைக் கண்டித்திருப்பதோடு கீழ்ஜாதியார்களென்று பிராமணர்களால் விலக்கப்பட்டிருந்தவர்களை யெல்லாம் தங்கள் கூட்டத்திற் சேர்த்துக் கொண்டிருக்கிறார்களென்பதை சைவம், வைஷ்ணவம் முதலிய சமய நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் அறுபத்துமூவர், ஆழ்வாராதிகள், கபீர்தாஸர் முதலியவர்கள் ஆகிய பக்தர்களின் சரித்திரங்களால் அறிகிறோம். இதனால் ஜாதி வேற்றுமை அவசியமன்று எனத்தெரிகிறது.

சிலர் பாரம்பர்யத்தை ஒட்டித்தான் அதாவது அவரவர்கள் எந்தெந்தத் தொழிலைச் செய்யும் குலத்திற் பிறக்கிறார்களோ அதைக்கொண்டுதான் ஆதியில் ஜாதி பிரிக்கப்பட்டது. ஆகையால் அந்தந்தக் குலத்தில் பிறக்கிறவர்கள் அவர்களுக்கேற்பட்ட தொழில்களைத்தான் செய்யவேண்டும். அதுதான் ஈசுவர நியதி என்று சொல்லக்கூடும். இதை ஏற்றுக்கொள்ள நியாயம் இல்லை. ஏனெனில் தொழிலையொட்டி ஜாதிபிரித்திருப்பார்களாயின் ஒரு குலத்தில் பிறக்கிறவர்களுக்கு வேறுதொழிலில் புத்திசெல்ல நியாயமில்லை. எப்போது வேறு தொழிலில் புத்திசெல்லுகிறதோ அப்போது அவர்களை அந்த ஜாதியைச் சேர்ந்தவர்களென்று சொல்லவும் கூடாது. இது ஈசுவர சம்மதமாயின் இவ்விதமுரண் ஏற்பட நியாயமில்லை. ஏனெனில் ஈசுவரன் இன்ன தொழிலைத் தான் செய்யவேண்டுமென்று விதித்து அத்தொழிலைச்செய்யும்குலத்தில் பிறப்பித்திருப்பாராயின் ஜீவர்கள் அதை மீறிநடக்கமுடியாது.

இப்போதிருக்கும் நிலைமையில் ஜாதியானது அநாவசியமான சில கட்டுப்பாடுகளைத் தவிர மற்ற விஷயங்களில் ஆதி நிலைமைக்கே வந்துவிட்டதெனச் சொல்லலாம். ஏனெனில் இன்ன ஜாதியில் பிறந்தவர்கள் இன்னதொழிலைத்தான் செய்யவேண்டு மென்னும் கட்டுப்பாடொன்றுமில்லை. இதனால் தொழிலைக் கொண்டு தான் ஜாதியென்பது போய்விட்டது. எப்போது தொழிலால் ஜாதியில்லை யோ அப்போது, பிறப்பாலும் ஜாதியில்லை.

ஏனெனில் ஜந்மநாஜாயதெ ஶூத்ரஃ என்னும் ஆப்தவாக்கியம் பிறப்பால் எல்லோரும் சூத்திரர்களென முறையிடுகிறது. தற்காலத்தில் பிராமணர்களாயுள்ளவர்கள் வியாபாரம், பயிர்த்தொழில், உத்யோகம், பரிசாரகம்முதலிய வேலைகளைச் செய்கிறார்கள். இவர்கள் வீட்டில் பிறக்கும் குழந்தைகள் பிராமணர்களா, வைசியர்களா, க்ஷத்திரியர்களா அல்லது சூத்திரர்களா?

இவ்விதகட்டுப்பாடுகள் நம்முடைய பேதைமையேயன்றி,வேறல்ல. மற்றும் இந்நான்கு ஜாதியார்களுள்ளும் எத்தனை உட்பிரிவுகளிருக்கின்றன? இவைகளுக்கெல்லாம் ஆதாரம் எந்தச் சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது? இக்கட்டுப்பாடுகளையெல்லாம் நீக்கினாலன்றி நமக்குள் பிரத்தியேக பாவம் குறைவுபட்டு ஒற்றுமை ஏற்படாது. நாமெல்லோரும் ஆதியில் ஏற்பட்டபடி ஈசுவர சாக்ஷாத்காரத்தை யடையமுயலும் ஒரு வருணத்தவர்களாகவேண்டும். பகவான் புத்தர் "ஜாதி வேற்றுமையில்லை. சகலரும் சமானர், எல்லோரும் முக்தியடையலாம்" எனக் கூறுகின்றனர். அவரை விஷ்ணுவின் தசாவதாரங்களிலொருவரென நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். இவற்றையெல்லாம் கவனியாமல் ஜாதியென்னும் மதப்பேயை நேசித்துத் திரிவோமாயின் இதைவிட அறியாமை வேறொன்றுமில்லை.

அன்றியும் இப்போது கொள்ளப்பட்டிருக்கிறபடி வருணத்தைப்பற்றிய எண்ணமானது சரியானதல்லவென்பதே பகவான் கிருஷ்ணனுடைய அபிப்ராயம். இதைக் கீதாசாஸ்திரம் நன்றாக வெளியிடுகிறது. அருச்சுனன் ஜனங்களெல்லோரும், கொல்லப்பட்டுப் போய்விட்டால் ஸ்திரீகள் பழிப்படைந்து வருணஸங்கரம் உண்டாய்

விடுமேயெனக் கேட்டதற்கு பகவான் சொன்னபதில் யாது? "என்னடா! அதிகமாகத் தெரிந்துகொண்டவனைப்போல் பேசுகிறாயே" என்னும் பதிலல்லவா? இதனாலேயே அருச்சுனன் கொண்டிருந்த அபிப்ராயம் சரியானதல்லவென்று ஏற்படவில்லையா?

அவர் கீதையில் என்ன சொல்லுகிறார்? "எப்போது தருமத்திற்குக் குறைவுண்டாகிறதோ, அப்போது அவதரித்து தருமத்தை நிலைநாட்டுகின்றேன்" என்று கூறியிருக்கிறார். அப்படியானால் அப்போது ஏற்பட்டிருந்த தருமக்குறைவு யாது? எதற்காக அவதாரம் செய்தார்? இப்போதிருப்பதைக் காட்டிலும் அப்போது அந்தந்த ஜாதியார்கள் அவரவர்களுக் கேற்பட்ட தொழிலையே செய்து வந்தார்களென்று சாஸ்திரங்களின் மூலமாய் நாமறிகிறோம். அப்படியானால் அவர் எதற்காக அவதாரம் செய்தார்?

அப்போது தருமக்குறைவு இருந்ததென்றும் அதை நீக்குவதற்காகவே அவதரித்தார் என்றும் நாம் நிச்சயமாகச் சொல்லலாம். எப்படியெனில் வருணமானது ஆதியில் ஏற்பட்ட முறையிலிருந்து பிறழ்ந்து ஒரு வருணமானது பலவருணங்களாகி ஜனங்களுக்குள் பிரத்யேக பாவம் மேலிட்டுவிட்டது. ஒவ்வொருவரும் தத்தம் ஜாதியே சிறந்ததெனக் கொண்டாடி வந்தார்கள். இதைச் சீர் திருத்தும் பொருட்டே பகவான் அவதரித்து பிரத்யேக பாவத்தை அடியோடு நாசஞ்செய்வதற்காதாரமாயுள்ள வருண சங்கரத்துக்கு இடங்கொடுத்தார். அவர் அவதாரம் செய்திருக்காவிட்டால் இப்போது ஏற்பட்டுக் கொண்டிருக்கிறபடி வருணசங்கரத்துக்கு இடமுண்டாகாது, இவ்வருண சங்கரத்தை உண்டாக்கவே அவதரித்தாரென்பதில் சந்தேகமில்லை.

அன்றியும் வருணம் ஆதியில் ஏற்பட்ட ஒழுங்கிலிருந்து விலகிப்போயிருப்பது கலியுகம் 5000 வருஷங்களுக்குப் பிறகு மறுபடியும் முன்போல ஒரே வருணமாக ஆகவேண்டியதற்காக வருணசங்கரம் உண்டாகப்போகிறதென பாகவதம், விஷ்ணுபுராணம், கல்கிபுராணம் முதலிய நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. சங்கரம் ஏற்படுவதுண்மையாயின் அது ஈசுவர நியதியில்லாமல் ஏற்படாது. அது

ஈசுவர நியதிப்படி நடப்பதானல் அதுவே ஜனங்களுக்கு சிரேயஸ்கரம் என்பதில் ஐயமில்லை.

இவ்வருண சங்கரம் தான் இனி யேற்படப்போகும் 6-வது மூலவர்க்கத்துக்கு ஆரம்பம். அம்மூலவருக்கத்தவரெல்லாரும் ஒரேவிதமான சுபாவமுள்ளவர்களாகவும், தான், தனது என்னும் அகங்கார,மமகாரங்கள் சிறிது மில்லாமல்ஐக்கியத்துடன்ஒரேகுடும்பத்தில் வசிப்பவர்களைப் போலவுமிருப்பார்களெனக் கூறப்படுகிறது. ஆகையால் நாம் ஆதியில் ஏற்பட்ட ஒழுங்குக்கே இவ்வருணத்தைக் கொண்டுவரப் பிரயாசை யெடுத்துக் கொள்ளவேண்டும்.

ஆனல் இதற்கு முக்கியமான தடையாக நிற்பது அசுத்தம். நாம் சாதாரணமாக ஒரு பிராமணன் வீட்டைப் போய்ப்பார்ப்போமானல் அவன் எவ்வளவு ஆசாரஹீனமுள்ளவனக விருந்தபோதிலும் அவன் வீட்டில் காணப்படும் சுத்தமானது, பொதுவாகக் கூறுமிடத்து, மற்ற மூன்று வருணத்தவர்கள் வீடுகளிலும் காண்பது அரிது. ஒரு ஜாதியாரிடம் மற்றொரு ஜாதியார் அருவருப்புக்கொள்வதற்கும், நெருங்காமல் ஒதுங்கி நிற்பதற்கும், இதுவே காரணமாக விருக்கிறது. ஆகையால் முக்கியமாக நாம் இவ்வசுத்தங்களை மாற்றி கூடுமானவரை சுத்தமானது பரவும்படி செய்யவேண்டும். அன்றியும், பொதுவாக, எவ்வெவ் வழக்கங்களை விட்டு எவ்வெவ்வழக்கங்களைக் கைக்கொண்டால் சுத்தமானது முற்றிலும் வியாபிக்குமோ, அவ்விதமான நற் பழக்கங்களை யெல்லாம் கைக்கொள்ளவேண்டும். இவ்விதம் செய்வோமானல் மேற் சொன்ன வித்யாசமானது சீக்கிரத்தில் மாறுதலடையும்.

ஆத்தங்குடி M. ஸ்வாமிநாதஐயர்

---

## *முடிவும் மார்க்கமும்.

முன் ஒரு காலத்தில் நல்ல மனிதனொருவனிருந்தான். அவன் கிருஸ்துவன். அம்மார்க்கத்தில் மிகப்பற்றுடையவன். அவன் தன்னுடைய குருநாதனை மிகவும் நேசித்ததோடு அவர்கூறியபோதனைகளின்படி விருப்பத்தோடு நடந்துவந்தான். தன்னுடைய அயலாரிடத்தில்விசுவாசமுள்ளவன், அது மட்டுமல்ல, தன் விரோதிகளிடத்திலும் நேசம் பாராட்டி வந்தான். ஏழைகளையும் பிணியாளர்களையும் பாதுகாத்து வந்ததோடு சதாகாலமும் கடவுளைப் புகழ்ந்தும் வந்தான்.

அவன் தக்கபருவத்தை யடைந்தபொழுது பிறதேசங்களிற் சென்று தன் குருநாதனுடைய உபதேச மொழிகளைப் பிரசங்கிக்க வேண்டுமென்னும் அடக்கமுடியாத அவாவுடையவனானான். ஆகையால் அவன் தன் காரியங்களையெல்லாம் ஒழுங்குபடுத்திவைத்துவிட்டுப் புறப்பட்டான்.

நூதனமும், மூடஜனங்கள் வசிக்கிறவுமான அன்னிய நாடுகளில் அலைந்து ஜனங்களுக்குப் பரிந்து போதித்ததோடு அத்தேசங்களிலெல்லாந் தன் குருநாதன் பெயரைப் பக்தியோடும் வணக்கத்தோடும் வெளியிட்டு வந்தான். சில சமயங்களில் ஜனங்கள் தங்களுடைய குருநாதர்களாகிய கான்பூஷியஸ், புத்தர், முகமது முதலியோர்களைப் பின்பற்றுகிறோமென்று சொல்லி அவன் போதனைகளுக்குச் செவிசாய்க்கவில்லை.

அதன் பேரில் அம்மனிதன் மிகவும் வருந்தலானான். ஏனெனில் "உலகரக்ஷகராகிய, இயேசுநாதராலன்றி அவர்கள் எப்படிக்கரையேற்றப்படக்கூடும்" ஜனங்கள் அவனிடம் கோபங்கொண்டு தங்களுடைய பட்டினத்திலிருந்து அவனைத்துரத்தும் வரை, அவன் அதிக ஊக்கத்தோடு நெடுநாள் அவர்களிடம் போராடினான்.

இப்படியாக அலைந்து திரிந்து கடைசியில் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தான். "நான் பிரயாசைப்பட்டு இலக்ஷக்கணக்கான ஜீவர்களைச் சத்தியமதத்தைத்தழுவும்படி திருப்புவதற்கு இதுவே சரியான பூமி" என்று நினைத்தான்.

* "நக்ஷத்ரதூதன்" பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.

அப்படிக்கிருந்தும் அவன் அத்தேசத்தை மிதித்தவுடனே நோயுற்று அநேக வாரங்கள் உயிர்நீங்கும் நிலையிலிருந்தான். அவன் இந்து மதத்தைச் சேர்ந்த ஒரு சாமியார் வீட்டில் தங்கியிருந்தான். அச்சாமியார் பிரதிப்பிரயோஜனம் கருதாது இவனுக்குச் செய்யவேண்டிய ஒத்தாசைகளையெல்லாம் அன்போடு செய்து உணவளித்து உபசரித்தார்.

அந்த மனிதன் முன்போல சௌகரியத்தையுடையும் நாள் வந்தது, "அன்னியமார்க்கத்தைக் கைப்பற்றியொழுகும்இச்சாமியார் ஒரு கிருஸ்துவனுக்குரிய நற்குணங்களை உடையவராயிருக்கிறார். அவர் என்னைத்தன் வீட்டினுள் அழைத்து என்னைப்போஷித்தார். என்னுடைய சொந்த மகன் என்னை எப்படி நேசிப்பானோ அது போலவே அவர் என்னை நேசிக்கிறாரென்று நம்புகிறேன். என்னுடைய குருநாதனைப் பின்பற்றுவதற்கு இவர் உண்மையில் பாத்தியஸ்தர். கிருஸ்துவனாகும்படி அவரை நான் தயார்செய்வேன். அப்போது உண்மையில் அவர் என்னுடைய மகனாய் விடுவார். நாங்களிரண்டுபேருஞ் சேர்ந்து செய்யும் வேலையால் அநேக ஆன்மாக்கள் கரையேற்றப் படுவார்களென்பதில் ஐயமில்லை" என்று நினைத்தான்.

கிருஸ்துவ மதக்கோட்பாடுகள் எல்லாவற்றையும் சுவாமிக்கு எடுத்துக்கூறி அவரை ஞானஸ்நானம் பெறும்படி வேண்டினான். 'ஏசு கிருஸ்துநாதருடைய இரத்தத்தால் மட்டும்தான் கரையேற்றப் படுவாய்" என்று சொன்னான்.

வருத்தத்தோடு சாமியார் இப்போது சொல்லுகிறார். "நான் இந்து, மற்றொரு குருநாதரை வழிபடுகிறேன். நான் நடப்பதற்கு அவர் எனக்கொரு மார்க்கத்தைக் காட்டியிருக்கிறார். நான் அவரைக் கைவிடலாமா?"

கிருஸ்துவன்:—"ஓ சாமியாரே! உலகத்தாரைக் கரையேற்றக் கூடியவர் நாசரத் ஏசுநாதர் ஒருவரே என்று உமக்கு உறுதியாகச் சொல்லுகிறேன். அவர்தான் உங்களைக் கரையேற்றுவார். காலங் கடந்து போவதற்குமுன் அவர் மதத்தைத் தழுவுங்கள்."

சாமியார்:—"நம்முடைய மார்க்கங்கள் ஒன்றாகவிருந்தாலெப்படியோ அதேமாதிரி நான் உம்மை மனப்பூர்வமாக நேசிக்கிறேன்; ஆனால் அவைகள் வெவ்வேறு. நான் என் குருநாதனை வழி படுகிறேன். நீர் உம்முடைய ஏசுநாதரைப் பின்பற்றுகிறீர்."

நெடுநேரம்வரை சுவாமியாரோடு அம்மனிதன் அநேக நியாயங்களை எடுத்துக்காட்டி வியவகாரம் செய்தான். அவனுடைய மனம் சுவாமியாரைக் குறித்து இளகிற்று. தான் மிகவும் நேசித்த ஒருவன் கிருஸ்துவ மதத்தைச் சேராதவனாகவிருக்கிறானே என்று அவன் மிகவும் வருந்தினான்.

அவர்கள் இருவரும் பிரிந்து போனார்கள்.

தன்னுடைய அன்பான குருநாதனைப் பின்பற்றி நடப்பதற்கு மிகுதியான ஜனங்களைச் சேர்ப்பதற்காக அம்மனிதன் மற்ற தேசங்களில் அநேக வருஷகாலம் இடைவிடாது உழைத்து வந்தான் அவனுக்கு சுவாமியாரிடம் ஏற்பட்டிருந்த அன்பானது நீங்கவில்லை. சுவாமியார் கிருஸ்துவனாகி விடவேண்டுமென்று கடவுளைப்பிரார்த்தித்து வந்தான்.

கடைசியாக அம்மனிதனுடைய ஆத்மா இவ்வுலகத்திலிருந்து அழைக்கப்பட்டது. அவன் தன்னுடைய ஸ்தூல சரீரத்தைத் தள்ளிவிட்டு சுவர்க்க லோகத்திற்குச் சென்றான். சுவாமியாருடைய சரீரமும் இறந்து போய்விட்டது. சுவர்க்கத்தில் அவர்களிருவரும் சந்தித்தார்கள். அம்மனிதன் சுவாமியாரை நோக்கி, "ஆ, எனது பரிதாபமான சாமியாரே! தாங்கள் தங்களுக்குரிய தீர்ப்பைப்பெறப் போகிறீர்கள். ஏசுநாதர் உம்மைப்பற்றி தீர்மானிக்கப்போகிறார். உம்மிடம் எனக்கேற்பட்டிருக்கும் என் அற்ப அன்பானது உம்மைக்காப்பாற்றட்டும்" என்று கூறினான்.

சாமியார்:—"இல்லை, இல்லை; உம்முடைய அன்புவிட மேன்மைபொருந்தியதான அன்பு ஒன்று என்னைக் காப்பாற்றிவிட்டது; இதோபாரும் என் குருநாதன் வருகிறார்!

"உம்முடைய குருநாதரா!" என்று அம்மனிதன் பார்த்தான். திவ்விய பிரகாசத்தால் சூழப்பட்ட ஒரு சொரூபமானது அவர்களு

க்கு முன்னே தன்னுடைய கைகளை நீட்டிக்கொண்டு நின்றது. வசீ நாதர் தன்னுடைய காரியங்களோடும் முட்கிரீடத்தோடும் நிற்பதை அம்மனிதன் கண்டான். எப்பொழுதும் இளமையோடும் தேஜஸோடும் வீட்டிற்கும் குழந்தைகளுக்கும் கடவுளாக விளங்கும் பாலகிருஷ்ணனைச் சுவாமியார் கண்டார். அவர்கள் இருவரும் மிதமிஞ்சின அன்போடும் பக்தியோடும் வந்தனம் செய்தார்கள். குருநாதர் அவர்களிருவரையும் அளவு கடந்த அன்போடு கூடிய சந்தோஷத்துடன் தழுவிக்கொண்டு சொன்னதாவது:—

“என்னுடைய குழந்தைகளே! (கடவுளொருவரென்றும்) கடவுளுடைய பெயர் ஆயிரத்தொன்று என்றும் நீங்கள் அறிந்ததில்லையா”?

P. குமரப்பசெட்டி
ஆத்தங்குடி.

---

## நன்மொழி.

---

அந்தகா ரத்தையோ ரகமாக்கி மின்போலென்
 அறிவைச் சுருக்கி னவரார்
அவ்வறிவு தானுமே பற்றினது பற்றுய்
 அழுந்தவும் தலை மீதிலே
சொந்தமா யெழுதப் படித்ததார் மெய்ஞ்ஞான
 சுகநிட்டை சேராமலே
சோற்றுத் துருத்தியைச் சதமெனவு முண்டுண்டு
 தூங்கவைத் தவரார் கொலோ
தந்தைதாய் முதலான அகிலப்ர பஞ்சம்
 தனைத்தந்த தெனதாசையோ
தன்னையே நோவனோ பிறரையே நோவனோ
 தற்கால மதை நோவனோ
பந்தமா னதுதந்த வினையையே நோவனோ
 பரமார்த்த மேது மறியேன்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
 பரிபூரணனந்தமே.

417

## சமாசாரம்.

---

**விளம்பரம்:—** மார்ஜினில் கண்ட இன்கம்டாக்ஸ் ஆபீசர்கள் முன்பாக கொண்டுவரப்படுகிற கணக்குகளை ஆடிட் செய்யும்பொருட்டு மாதம் ரூ 50—2—60.

1. மதுரை கலெக்டர் துரையவர்கள்.
2. மதுரை ஜனரல் சார்ஜு டிப்டிகலெக்டரவர்கள்.
3. மதுரை தாசில்தாரவர்கள்..

சம்பளத்தில் மதுரை கலெக்டர் துரையவர்கள் ஆபீஸில் ஒருகணக்குச் சிப்பந்தி நியமனம் செய்யப்போகிறபடியால் ஷை உத்தியோகம் தேவையானவர்கள் மதுரை கலெக்டர் துரையவர்களுக்கு நாளது 1915-ம் வரு ஏப்ரல் மீ 1உ க்குள் மனு மூலமாய் தெரியப்படுத்திக் கொள்ளலாம். இந்த உத்தியோகம் டெம்பாரியாக ஒவ்வொருவருஷமும் 12 மாதங்களுக்கு நியமிக்கப்படும். கவர்ன்மெண்டில் மற்ற உத்தியோகங்களுக்கு வேண்டிய மெட்ரிகுலேஷன் அல்லது ஸ்கூல்பைனல் பரீட்சை தேர்ந்திருக்கவேண்டுமென்பதாவது 25வயதுக்குட்பட்டிருக்கவேண்டுமென்பதாவது அவசியமில்லை. ஆனால் அவர்கள் இந்தியா வியாபார ஆபீசுகளில் 10, 12, வருஷங்களுக்குக் குறையாத அனுபவமும் கணக்குகளை சரியாய் வைக்கவேண்டியமுறைகளும் தெரிந்திருக்கவேண்டும். அப்படி அனுபவம் இருக்கிறதென்பதை காண்பிக்கும்பொருட்டு ஸர்ட்டிபிகேட்டுகள் தங்கள் மனுக்களுடன் அனுப்பவேண்டும். இந்த உத்தியோகத்திற்கு லாயக்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதார் அவசியமானால் கவர்ன்மெண்டு உத்தியோகத்திற்குறிய வயது படிப்பு சம்பந்தமான விதிகளினின்று நீக்கப்படுவார்.

| | | |
|---|---|---|
| மதுரை கலெக்டராபீசு.<br>19—3—15. | } | W Scott Brown<br>For Collector. |

---

சோரந்துப் பெரியாங்குப்பம் பிரஹ்மஞான கான்பரேன்ஸ்:—இவ்வூர் தென்னாற்காடு ஜில்லா திருவண்ணாமலைக்கு சமீபத்தில் 18 மைல் தூரத்திலுள்ள மலைவளம் பொருந்திய ஓர் சிறு கிராமம். இங்கு நாளிது மீ 13, 14 உகளில் மதுரை சிதம்பரம் திருவண்ணாமலை மேலக்கடம்பூர் கூடலூர் ஆலம்பூண்டி எனங்குடி திருப்பணிவட்டாரம் இன்னும் அநேகம் சிறு ஊர்களிலிருந்தும் இந்த சமாஜத்தைச் சேர்ந்தவர்களும் அந்நியர்களுமாகப் பல மஹாஜனங்கள் கூடி ஷெறபடி தென்னாற்காடு ஜில்லா டிஸ்ட்ரிக்ட் பிரஹ்மஞான சங்கத்தின் வருஷாந்திய ஏழாம் உத்ஸவத்தைக் கொண்டாடினார்கள். அந்த ஸபாநாயகராக மதுரை ஹைக்கோர்டு வக்கீல் கனம் வி. இராமச்சந்திரய்ய

ரவர்கள் வீற்றிருந்தனர். சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை இரண்டு நாட்களி லும் "மோக்ஷமார்க்கம்" என்பதுமுதல் நமது வீடுகளில் அந்நபாநாதிகளை சமயல் செய்வதற்கு "நூதனமான பாக சாஸ்திரமுறை" என்பது வரை அநேகம்விஷ யங்களைப் பற்றித் தற்காலத்திற்கு ஏற்றவிதமாய் ஜனங்களுக்குப் பிரயோஜ னப்படும்படி உபந்யாஸங்கள் நடத்தப்பெற்றன. உபந்யாஸங்களும், மிக மதுரமாயும், குழந்தைகள், ஸ்திரீகள்முதல் பண்டிதர்கள் பரியந்தம் ரஞ்ஜ நப்படுத்துவதாயும் ஏற்பட்டன. ஆகையால் ஜநங்கள் மிக உத்ஸாஹத்துடன் இடைவிடாத கவனங்கொண்டு சிரவணம் பண்ணினார்கள். பிரதி பிரஸங்கத் தின் முடிவிலும் அக்கிராசனாதிபதியவர்களுடைய வசநங்கள் அப்பொழுது முடிந்த உபந்யாசத்தின் கருத்துகளைச் சுருக்கித் திரட்டிக் காட்டியும், அதின் முக்கியமான அம்சங்களை விசேஷித்துச் சிறப்பித்தும் பிரகாசப் படுத்தினர். இந்த ஸங்கத்தில் நிகழ்ந்த ஓர் அதிசயமாவது, கிராமத்திலுள்ள ஸ்திரீஜநங்கள் மிகுஆவலாய் உபந்யாஸங்களைக் கேட்க ஒவ்வொரு தடவையும் வந்து பெருங் கூட்டமாகக் கூடினார்கள். வரவரக்கூட்டம் அதிகமாயினமையால், அவர்களுக் காக ஏற்பட்ட மறைவான இடம் அதிகப்படுத்த நேர்ந்தது.

இவ்வூர் பிரஹ்மக்ஞான சமாஜத்தின் நண்பர்கள் இந்தஜில்லாவில் வேறெ ங்கும் இல்லாதபடி, அழகான ஒரு சிறுகட்டிடம் புஷ்பம்சூழ்ந்த நந்தவனத்து டன் இந்த ஸமாஜத்திற்காகவே ஏற்படுத்தியிருக்கிறார்கள். இத்தோட்டத்திற் குள்ளேயே சபாமண்டபத்தின் முன்வாசலில் இச்சமயத்திற்கெனப் போட்டி ருந்த கொட்டகையில் இந்த சபையானது நிகழ்ந்தது.

அயலூர்களிலிருந்துவந்த நண்பர்களை விருந்தோம்பி அவ்வூர் ஸமாஜத்தார் செய்த உபசரணைகள் அவர்களது மிகுந்த அருமைப்பாட்டை விளக்கின. அவ ர்கள் செய்த அதிதிபூஜையானது வேறு எவ்விடத்திலும் இம்மாதிரி நடக்க வில்லை என்று சொல்லும்படியாகவே நேர்ந்தது.

உபந்யாஸங்களின் ஆரம்பத்திலும் முடிவிலும் சபாநாயக ரவர்களுடைய உரைகள் இவ்வித ஸமாஜங்களின் முக்கியமான கருத்தாகிய ஜநங்களின் சீர்தி ருத்தத்தைப் பற்றியும், அதை இக்காலத்திற் கேற்றபடி எவ்விதமாய் நடத்த வேண்டியதென்பதைப் பற்றியும் வைதிக, லௌகிகப் பிரமாணங்கள், யுக்திக ளுடன் பிரகாசப்படுத்தின. ஜநங்களுக்குள் ஜாதி, சமயம் இவற்றைப் பற்றிய சண்டை சச்சரவுகள் முழுமையும் ஒழிக்கப்பட வேண்டுமென்றும் அவ்விதமாய் ஸமரஸபுத்தி அநுஷ்டிக்கப் படாவிடில் இக்காலத்தில் எவ்விதத்திலும் முன்னு க்கு வரமுடியாதென்றும் கீழ் வருணத்தவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் வித்யை அவசியம் கற்பிக்கப்பட வேண்டுமென்றும், இவ்வித கைங்கர்யத்தை மேல் வர் ணத்தவர்கள் பரோபகாரமாகவும், ஈசுவர கைங்கர்யமாகவும், தேசாபிமானமாக

வும் அநுஷ்டித்துக் காட்டினாலன்றி அவர்களுக்குண்டாகும் அபவாதமும் குறை வும் ஒழியாமற் போவதுமன்றி, அவர்கள் முன்னுக்கு வருவதும் கூடாதென்றும் பசுமரத்தாணிபோல் நடுநிலைமையான பல நியாயங்களைக் கொண்டு வற்புறுத்திக் காட்டினார்.

---

கடம்பூர் நாடார் சங்கம்:—சென்றமீ 28, 29வ களில் இச்சங்கத்தின் 3-வதுவருஷ பூர்த்திக் கொண்டாட்டம், கடம்பூரில் விமரிசையாய் நடைபெற்றது. இச்சங்கம் நாடார்களுக்குமட்டு மில்லாமல் ஏனைய ஜாதியார்க்கும் கல்வி கற்பிக்கும் கைங்கர்யத்தைக் கைக்கொண்டு உழைத்து வருகின்றது. இச்சங்கத்தார் அநேகர் மாம்ஸபக்ஷணத்தை விலக்கி, ஜீவகாருண்யத்தின் ஆவசியகத்தை நன்குணர்ந்தவர்களாய் சாகபக்ஷணத்தையே கைக்கொண்டிருக்கிறார்கள். சொற்பம்பேர்கள்மட்டும், ஜீவகாருண்யத்தை நன்கறிந்தவர்களாயினும், நெடுநாள் வழக்கமாகிய மாம்ஸபக்ஷணத்தை உடனே நிறுத்த இயலாமல் இருக்கின்றனர். அவர்களும்சொற்பநாட்களில் கொல்லாவிரதத்தையே அநுசரிப்பர் என்று நம்புகிறோம். மதுரை, திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுத்தூர், தூத்துக்குடி முதலிய ஊர்களிலுள்ள பிரஹ்மஞானஸபை அங்கத்தினர் பலர், இச்சங்கத்திடத்து விசேஷ அன்புகூர்ந்து, கடம்பூருக்கு அச்சமயம் விஜயம் செய்திருந்தனர். அச்சங்கத்தின் அபிவிருத்தியை எப்போதும் கருத்திற்கொண்டு, பிரஹ்மஸ்ரீ R. பஞ்சாபகேச ஐயரவர்களும், லாட்ஜ் இன்ஸ்பெக்டர் பிரஹ்மஸ்ரீ P. R. சுந்தரராஜ ஐயரவர்களும் செய்துவரும் நன்முயற்சி மெச்சத்தக்கது.

---

மதராஸ் கவர்ன்மெண்டு குஷ்டரோகிச் சாலையும் அடையாறு பிரஹ்மஞானஸபை மெம்பர்களும்:—குஷ்டரோகம் ஒரு தொத்து வியாதியாகையால் அது மற்ற ஜனங்களுக்கும் பரவாதபடி, குஷ்டரோகிகளைத்தனியாக ஒரு இடத்தில் வைக்கும்படி சர்க்கார்செலவில் சென்னைப் பட்டணத்தில் ஒரு குஷ்டரோகிச் சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலுள்ளவர்கள் வெளியே போகாமல் அங்கேயே அடைபட்டிருப்பதாலும், குஷ்டரோகிகளைத் தவிர வேறு ஸஹவாஸ மில்லாதபடியாலும், வியாதியினுடைய தொந்தரவாலும் அவர்களுக்குச் சுகமான வாழ்க்கை இராது. அதை உத்தேசித்து அடையாற்றில் வசிக்கும் பிரஹ்மஞானஸபை மெம்பர்களிற் சிலர் மாதம் ஒரு தடவை அங்கே போய் அவர்களுடன் சேர்ந்து புஸ்தகங்கள் படித்தும், கடவுள் ஸ்தோத்திரங்கள் முதலியவை சொல்லியும், வாத்தியங்களுடன் ஸங்கீதங்கள் முதலானவை பாடியும் அவர்களுக்கு உத்ஸாஹத்தையும் ஆனந்தத்தையும் உண்டு பண்ணிவருகிறார்கள். மத்தியகாலங்களில் அவர்களுடைய உபயோகத்துக்காக புஸ்தகசாலை ஒன்று அவ்விடத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம். அந்தப் புஸ்தக சாலைக்கு

அடையாற்று பிரஹ்மக்ஞானஸபை யிலிருந்து சில புஸ்தகங்கள் இனாமாய்க் கொடுத்திருக்கிறார்களாம். இதினும் உயர்ந்த கைங்கரியம் வேறு கிடையாதென்றே சொல்லலாம்.

---

இந்தியா கௌன்ஸிலுக்கு ஒரு புது மெம்பர்:—இந்தியா கௌன்ஸில் என்பது நம்முடைய சக்கிரவர்த்தியவர்களுக்கு இந்தியா விஷயமான யோசனைகளைச் சொல்லுகிற ஒரு சபை. அந்தச் சபையில் இரண்டு இந்திய மெம்பர்கள் உண்டு. அவர்களில் ஒருவரான ஸர். கிருஷ்ணகுப்தா என்பவர் வேலையைவிட்டு விலகிக் கொண்டபடியால் அவருக்குப் பதிலாக ஸர்தார் டல்ஜிட் ஸிங் என்பவரை சக்கிரவர்த்தியவர்கள் நியமித்திருக்கிறார். அவர் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்தவர். பிரஹ்மக்ஞான சபையின் ஊக்கமுள்ள மெம்பர். அந்த உத்யோகத்தை ஒப்புக்கொண்டு வேலை பார்ப்பதற்காக ஏப்ரல் மாசக் கடைசியில் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுப் போவார் என்று தெரிய வருகிறது.

---

ஸ்ரீமான் கோபால கிருஷ்ண கோக்கலே அவர்களும் கே. ஸி. ஐ இ. பட்டமும்:—நம்முடைய இந்திய சகோதாராகிய கோக்கலே யவர்கள் காலஞ் சென்றதைப்பற்றிச் சக்கிரவர்த்தியவர்கள் முதலாக உலகம் எல்லாம் துக்கப் படுகிறார்கள். அவருடைய மரணத்தைப் பற்றி டில்லியிலுள்ள சட்ட நிர்மாணஸபையில் கவர்னர் ஜனரல் அவர்கள் அநுதாபம் காட்டிப் பேசியபோது ஆறுமாசங்களுக்கு முன் கோக்கலே அவர்களுக்கு கெ. ஸி. ஐ. இ. என்னும் பெரிய பட்டம் அளிக்கும்படி சக்கிரவர்த்தியவர்களுக்குத் தான் சிபார்சு செய்ததாயும், அவ்விதமான பட்டங்கள் தனக்கு வேண்டாம் என்று கோக்கலே அவர்கள் மிகவணக்கத்துடனும் விநயத்துடனும் மறுத்து விட்டதாயும் சொன்னார்களாம். அப்படிப்பட்ட மஹாநுபாவரை நாம் இழக்க நேரிட்டது நம்முடைய துர்ப் பாக்கியம்.

---

டாக்டர் போர்னியர் டால்ப் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு புது யந்திரம்:—லாகூர் கவர்ன்மெண்டு காலேஜில் போதனாசிரியர் ஆக இருக்கும் டாக்டர் போர்னியர் டால்ப் என்பவர் பேச்சு, பாட்டு, முதலான ஸகல சப்தங்களையும் கண்ணுக்குப் புலப்படும்படி காட்டக் கூடிய ஒரு புது யந்திரத்தைத் தான் கண்டு பிடித்திருப்பதாயும் அதனால் காது கேளாதவர்கள் தங்களுடைய நேத்திரங்களால் அந்த விஷயங்களை சுலப

மாய் உணருவது எப்படி ஸாத்தியமாகும் என்பதைப் பற்றி சென்ற பிப்ரவரி மீ 15 வ திங்கட் கிழமை உபந்யாசம் செய்தாராம்.

---

**இராமேசுவரம் தேவஸ்தானத்தின் ஆதரவில் பிரஸங்கங்கள்:**—நாளிது ஆனந்த ஸ்ரீ ஆடி உத்ஸவகாலத்தில் ஹிந்து மதஸம்பந்தமான சில உபந்யாஸங்கள் நடந்தன. பல ஜனங்கள் கேட்டுத் திருப்தி அடைந்தார்கள். அதுபோலவே மாசி பிரஹ்மோத்ஸவத்திலும் அருமையான உபந்யாஸங்கள் நடை பெறும்படி தேவஸ்தானத்தில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தப் பிரகாரமே ஒவ்வொரு பெரிய தேவஸ்தானங்களிலும் ஒவ்வொரு உத்ஸவத்திலும் நடப்பித்தால் அளவற்ற நன்மை யுண்டாகும்.

---

**திருவனந்தபுரத்தில் பஞ்சமர்களின் சபை:**—திருவனந்தபுரத்தில் பஞ்சமர்கள் கூடி ஒருஸபை ஏற்படுத்தி யிருக்கிறார்களாம். அதில் சார்ந்த மெம்பர்களில் சுமார் தொள்ளாயிரம் மெம்பர்கள் சேர்ந்து திருவாங்கூர் ஸமஸ்தானம் திவானவர்களை வரவேற்று அவருக்குத் தங்களுடைய குறைகளைக்கூறித் தங்களுடைய நிலைமையை நன்றாக்க வேண்டுமென்று பிரார்த்தித்து ஒரு உபசாரணைபத்திரம் வாசித்தார்களாம். அந்த உபசாரணைப் பத்திரத்தை வாசித்தவள் பச்சிஎன்ற ஒரு புலையப்பெண் என்று தெரியவருகிறது. அவர்கள் உயர்கலம் அமையும்படியான ஏற்பாடுகளைத் திருவாங்கூர் ராஜாங்கத்தார் செய்விப்பார்களென்று நம்புகிறோம்.

---

**அமெரிக்காவில் தபால் கொண்டுபோக ஆகாசக்கப்பல்கள்:**—ஒரு தேசத்திலிருந்து மற்ற தேசங்களுக்கும், ஒரேதேசத்தில் ஒரு பட்டணத்திலிருந்து மற்ற பட்டணங்களுக்கும் தபால்கள் இன்னும் சீக்கிரமாகவும் சுலபமாகவும் போகவர ஏற்பாடு செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் அமெரிக்கா தேசத்தில் ஆகாசக்கப்பல்கள் வழியே தபால் அனுப்புகிறதென்று தீர்மானித்து இரண்டாயிரம் ஆகாச கப்பலோட்டிகளைத் தயார் செய்திருக்கிறார்களாம்.

---

**தெனாலி தாலூகாவில் எலிமெண்டரி எடுகேஷன் லீக்:**—இன்னமும் நம்முடைய தேசத்தில் பெரும்பான்மையோர் எழுதப்படிக்கத்தெரியாதவர்களாயிருக்கிறபடியால் கவர்ன்மெண்டாருடைய பிரயத்தனத்தோடு கூட நாமும் விசேஷமான முயற்சி எடுத்துக்கொண்டால் ஒழிய ஜனங்களுக்குள் விரைவாய் கல்வியை பரவச்செய்வது சாத்தியப்படாது. அந்தநோக்கத்துடன்தெனாலி தாலூகாவில் உள்ள அநேக சிறுவர்கள் ஒன்றுகூடி எலிமெண்டரி எடுகேஷன்

லீக் என்னும் ஒருசங்கத்தை ஏற்படுத்தி உழைத்து வருகிறார்கள். மற்ற இடங்களிலும் அவ்விதமான சங்கங்கள் ஏற்படுத்தி நடத்த வேண்டுமென்று அபிப்பிராயமுள்ளவர்கள் ஒருகால் அவர்கள் வேலைசெய்யும்வழியை விவரமாய்த் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்று அபேக்ஷிக்கும் பக்ஷத்தில் தங்களுக்கு எழுதினால் அது சம்பந்தமான ஸகல விவரங்களையும் தெரியப்படுத்துவதாக அறிவித்திருக்கிறார்கள்.

---

**படிப்பு முடிந்தபின் விவாகம்:**—லாஹோரிலுள்ள D. A. V. ஸ்கூலில் விவாஹமான பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளுகிறதில்லை என்று தீர்மானம் செய்து, அந்தப்படி அநுஷ்டித்து வருகிறார்களாம். சர்க்கார் பள்ளிக்கூடங்களில்லாமல் ஜனங்களால் நடத்தப்பட்டுவரும் மற்ற பள்ளிக்கூடங்களிலாவது அவ்விதமான ஏற்பாடுசெய்தால் சிசுவிவாஹங்கள் ஒருவாறு குறையும். **சென்னைப்பட்டணத்தில் "கன்னிகாபரமேசுவரி வித்யார்த்தி கிருஹம்":**—மேனாட்டைப்போல் நம்முடைய தேசமும் கைத்தொழிலிலும், வியாபாரத்திலும், செல்வத்திலும், பலத்திலும் அபிவிருத்தியையடையவேண்டுமானால் நம்முடைய தேசத்தில் உயர்ந்தபடிப்புப் படித்தவர்கள் ஜாஸ்தியாக வேண்டும். ஏராளமான பணச்செலவு செய்யச் சக்தியுள்ளவர்களாயிருந்தால் ஒழிய உயர்ந்த படிப்புக்கு ஆசைப்பட இடமில்லாமல் போய்விட்டது. தானியங்களின் விலை வரவர உயர்ந்து பட்டணங்களில் சாப்பாட்டுச்செலவும் அதிகமாய்விட்டது. ஆகையால் முன்னுக்கு வரக்கூடிய புத்திசாலிகளை உயர்ந்தபடிப்புப் படிக்க ஒத்தாசை செய்வதைக்காட்டிலும் சிறந்த தர்மம் இல்லை. மதராஸ் சாவகார்பேட்டையில் கன்னிகா பரமேசுவரிகோவில் தர்மகர்த்தர்கள் ஷை கோவில் ஐவேஜியிலிருந்து மதராஸ் இங்கிலீஷ் கலாசாலைகளில் உயர்ந்தபடிப்புப் படிக்கும் பிள்ளைகளில் 100 பேர்களுக்கு இனாமாக சாப்பாடு போடுவதாக "Kanyaka Parameswari Students' House" என்று ஏற்படுத்தி பல வருஷங்களாக நடத்திவருகிறார்கள். தங்களுடைய செலவில் ஒரு பையனை கல்கத்தா வைத்திய சாலையில் (National Medical College) படிக்க அனுப்பித்திருக்கிறார்களாம்.

---

**சென்னைப்பட்டணத்தில் மணலிஹாஸ்டல் என்ற ஒரு வித்தியார்த்தி கிருஹம்:**—ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருடைய நாளில் மதராஸில் பெருத்த வியாபாரம் செய்துவந்த சரவணமுதலியார் என்னும் பிரபு பிரதிதினமும் என்றென்றைக்கும் நூறு பிராமணர்களுக்கு அன்னம் போடுவதற்காகவென்று சில சொத்துக்களைவிட்டு ஒரு தர்மத்தை ஏற்படுத்தி நடத்திவந்தார். இப்போது அவருடைய வம்சஸ்தர்களாயும், படித்தவர்களாயும், ஐசுவரியவான்களாயும், மகா-ள-ள-ஸ்ரீ சரவண முதலியார் அவர்களும் கிருஷ்ணசாமி முதலியார் அவர்

களும், வித்தியா தர்மத்தின் அருமையையும் பெருமையையும் தெரிந்து அந்தத் தர்மத்தை மாற்றி உயர்ந்த படிப்பு படிக்கும் பிள்ளைகளில் 100 பேருக்கு இனமாக இருக்க இடமும் கொடுத்து சாப்பாடுபோட்டு உதவி செய்வதாக மணலி ஹாஸ்டல் என்னும் ஒரு ஸ்டூடெண்ட்ஸ் ஹவுஸ் ஏற்பாடு செய்து அதில் அந்த பிள்ளைகளுடைய உபயோகத்துக்காக ஒரு புஸ்தகசாலையும் ஸ்தாபித்து சிலவருஷங்களாக நடத்திவருகிறார்களாம். அதில் படித்து M. A., B. A., முதலான பெரிய பரீக்ஷைகளில் தேறினவர்கள் அனேகம் பேர்கள் உயர்ந்த உத்தியோகங்களில் இருக்கிறார்களாம். அடிக்கடி அந்த கனவான்கள் இருவரும் அந்த ஹாஸ்டலுக்குப்போய் கவனித்து அந்தப் பிள்ளைகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்து தங்களுடைய சொந்த குழந்தைகளைப் போல அன்புபாராட்டுகிறார்களாம். கலாசாலைகளிலுள்ள ஒவ்வொரு இடங்களிலும் இவ்விதமான தர்மங்கள் ஏற்படுமானால் முன்னுக்கு வரக்கூடிய புத்திசாலிகளான ஏழைப்பிள்ளைகள் எவ்வளவு பேருக்கு உபகாரமாயிருக்கும்.

---

**பம்பாயில் அநாத வித்தியார்த்தி கிருஹங்கள்:**—பெரிய பட்டணங்களில் ஆதரிப்பாரற்ற அனேகம் சிறுவர்கள் துஷ்டர்களுடைய வசத்தில் அகப்பட்டு துன்மார்க்கங்களில் அமைந்து தாங்களுங் கெட்டுப் பிறருக்கும் தீங்கை விளைவித்து வருகிறார்கள். அவர்களுடைய நயத்தைக் கருதியும் ஜனஸமூஹத்தினுடைய நயத்தைக் கருதியும் அப்படிப்பட்ட சிறுவர்களை ஆதரித்துப் படிப்பித்து நல்வழிப்படுத்தவேண்டியது அவசியம். பம்பாயில் சில தேசாபிமானிகள் அநாத வித்யார்த்தி கிருஹங்களை ஏற்படுத்தி அவைகளில் அவ்விதமான சிறுவர்களுக்கு இடங்கொடுத்து அவர்களைப் போஷிக்கவும் படிப்பிக்கவும் அவசியமான பொருளைச் சம்பாதித்து அவர்களை அன்புடன் ஆதரித்து நல்வழிப்படுத்துவதையே தங்களுடைய வேலையாக ஏற்றுக்கொண்டு நடத்திவருகிறார்களாம். குழந்தைகளின் ரக்ஷணார்த்தம் என்ற ஒரு ஸங்கம் சிலவருஷங்களுக்குமுன் அவ்விதமான நோக்கங்களுடன் சென்னைப் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அதற்குத் தேவையான பொருளுதவி இல்லாதபடியாலும் அதை வஹித்து நடத்துவதற்கு வேண்டிய உத்ஸாகமுள்ளவர்கள் கிடைக்காதபடியாலும் இதுவரை அதனுடைய நோக்கங்கள் சிறிதும் நிறைவேறவில்லை. அந்த ஸங்கத்தின் 7-வது வருஷ மஹோத்ஸவம் சென்ற பிப்ரவரி 6வ நடந்தேறியது. மதராஸ் கவர்னரவர்கள் அக்கிராசனம் வகித்தார்

கள். அனேக கனவான்கள் வந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் தன்னால் இயன்றமட்டும் பொருளுதவிசெய்து அந்த ஸங்கத்தை ஆதரித்து அந்ததர்மத்தைப் பரிபாலனம் செய்யவேண்டும் என்று கவர்னரவர்கள் வற்புறுத்திச் சொன்னார்கள். உடனே நெல்லூர் ஜில்லா முதுக்கூர் என்னும் கிராமத்திலுள்ள வெங்கம்மாள் என்பவர்கள் சகல செலவும்போக வருஷம் 1க்கு ரூ 300க்குக் குறையாமல் வரும்படி வரக்கூடிய 10 எக்கர் நஞ்சை நிலங்களை அந்த ஸங்கத்துக்கு நன்கொடையாக அளித்தார்களாம். இனி அந்த ஸங்கத்தின் காரியங்கள் நன்றாய் நடைபெறும் என்று நம்புகிறோம்.

---

வரதக்ஷிணைவாங்கவாவது கொடுக்கவாவது கூடாதென்று பரோடா ஸமஸ்தானத்தில் ஒரு சட்டம்:—பெண்ணாகப் பிறந்தால் விவாஹம் செய்துதான் ஆகவேண்டுமென்றும், அதுவும் ருதுமதியாகுமுன் செய்தாகவேண்டும் என்றும், அப்படிச் செய்யாத பக்ஷத்தில் அந்தப் பெண்ணையும் அந்தப் பெண்ணுடைய தாய்தந்தையர் முதலான பந்துக்களையும் ஜாதியிலிருந்து விலக்கிவிடவேண்டியதென்றும் தீர்ப்பர் தங்களால், ரொக்கமாகவோ நகைகள் பாத்திரங்கள் ரூபமாகவோவரதக்ஷிணை வாங்குகிறதென்ற ஒருகொடியவழக்கம் ஏற்பட்டுவிட்டது. அதை உத்தேசித்தும், வரதக்ஷிணை கொடுத்துத் தன்னுடைய பெண்ணை ருதுமதியாகுமுன் விவாஹம்செய்துவைக்க சக்தியற்ற தகப்பனையும், தன் நிமித்தம் தன்னுடைய எளிய தாய் தந்தையர்கள் அவமானத்துக்கு உள்ளாகவேண்டி யிருப்பதை நினைத்து, அந்தப் பெண் தற்கொலை செய்துகொள்ளும்படி சில இடங்களில் ஸம்பவிப்பதையும் உத்தேசித்து அதுவிஷயமாக அவசியமான சீர் திருத்தங்களைச் செய்துகொள்ள ஜனங்களால் ஸாத்தியப்படாமலிருப்பதை உத்தேசித்தும் பரோடா மகாராஜா அவர்கள் தன்னுடைய ராஜ்யத்தில் வரதக்ஷிணை வாங்கவாவது கொடுக்கவாவது கூடாதென்று தன்னுடைய ராஜாங்கத்திலுள்ள சட்டநிர்மாணசபையில் சட்டம் ஏற்படுத்துவதற்காக ஒரு மசோதா சட்டம் கொண்டுவந்திருக்கிறார்களாம்.

ஸேவாநந்தன்

---

## சிறுவர்க்குரிய விஷயம்

### ஸ்வர்ணமணிகளுக்குக் கடிதம்.

அன்புள்ள ஸ்வர்ண மணிகளே!

சென்ற பிப்ரவரிமீ 28உ கடம்பூர் "ஸ்வர்ணமணிமாலைப்" பிள்ளைகளுக்கு, நான் சில வார்த்தைகள் சொல்ல நேர்ந்தது. அவைகளையே எல்லோருடைய உபயோகத்திற்கும் கீழே எழுதியிருக்கிறேன். நீங்கள் அவைகளை நன்றாய்ப் படித்து, தவறாமல் அவைகளை அப்யஸிக்க வேண்டும். கடம்பூர்ப் பிள்ளைகள், மகா-ா-ா-ஸ்ரீ R. பஞ்சாபகேச ஐயரவர்களுடைய பழக்கத்தால் உத்தம மாணாக்கர்களின் லக்ஷணங்களை நன்றாய் அறிந்துகொண்டிருக்கிறார்கள். கடம்பூரில் சொன்ன விஷயமாவது:—

அன்பு என்னும் வார்த்தை தான் ஸ்வர்ணமணிமாலைச் சங்கத்தாராகிய நாம் உச்சரிக்க வேண்டிய மந்த்ரம். சில சமயங்களில் நீங்கள் மனப்பாடம் பண்ணியிருக்கும் தமிழ்ப் பாட்டுகள் முதலியவை, நீங்கள் இச்சிக்காத போது கூட, அடிக்கடி உங்கள் மனத்தில் நினைவுக்கு வரும். அதன் காரணமென்ன? நீங்கள் முதலில் வாக்கினால் திரும்பத் திரும்பப் படித்தவைகளெல்லாம் மனதில் நன்றாய்ப் பதிந்துவிட்டன. அதுபோலவே இவ் அன்பைப் பற்றிய விஷயமும் உங்கள் மனதில் நன்றாய்ப் பதியவேண்டுமென்பது தான் என் கருத்து. அப்போது உங்கள் மனத்தில் அன்பைப் பற்றிய எண்ணமே அடிக்கடி உதிக்கும். கோபம், பகை உள்ள எண்ணங்கள் உங்கள் மனத்தில் தோன்றா.

நாம் பொதுவாக, நம்மைப் பிரியமாய் விரும்புகிறவர்களிடத்தில் மட்டுமே அன்புள்ளவர்களாயிருக்கிறோம். இது போதாது. நம்மை விரும்பாதவர்களிடத்தில் தான் விசேஷமான அன்பு பாராட்டி, அவர்களுக்குசுகம் ஏற்படட்டும் என்று நாம் ஊறுதியாய் நினைக்கவேண்டும். அவர்களிடம் துவேஷம் கொள்ளலாகாது. "ஸ்வர்ண மணிமாலையின்" உறுதிமொழியில் நீங்கள் என்ன வாக்களித்திருக்கிறீர்கள்? "எனக்கு எதிர்ப்படும் எந்த உயிர்ப் பிராணியையும் அன்பாகவே நடத்துவேன்" என்று சொல்லி யிருக்கிறீர்களல்லவா?

உயிர்ப் பிராணி என்றால் மனிதர்கள் மட்டும் என்று அர்த்தமல்ல. ஆடு, மாடு, கோழி, நாய் இவையெல்லாம் உயிர்ப்பிராணிகளே.

தாந்ய வகைகளாலும், காய், கறி, கனி, கிழங்குகளாலும் பசியையாற்றுவது, சரீரத்திற்கு சுகத்தைத் தருவதோடு, பணச் செலவில்லாமலும், பாபமில்லாமலும் இருக்க, உலகத்தில் எவ்வளவு ஜநங்கள் இரக்கமில்லாமல் எளிய பிராணிகளைத் தம் உணவிற்காக வதை செய்கின்றனர்!

காடுகளில் சஞ்சரிக்கும் நந்தேசத்து மஹான்கள் அநேகர் செடி, கொடிகளிலிருந்தும் காய்கறிகளைப் பறிப்பது கூட கொலைத் தொழில் தான் என நினைத்து, மரங்களிலிருந்து தாமாக உதிரக்கூடிய சருகுகளையும் பழங்களையுமே தின்று பிழைக்கின்றனர் என்றும் நாம் படித்திருக்கிறோமல்லவா? அவர்களுடைய கொள்கை செடிவர்க்கங்களும் உயிர்ப் பிராணிகள் என்பதே. இவ்வளவு கடுமையான விரதம் நம்மால் அநுஸரிக்க முடியாதாகையால், நம் உணவுக்கு வேண்டிய மட்டில் செடிகொடிகளிலுள்ள காய், பூ வகைகளைப் பறிக்கலாமே யொழிய மற்றெவ்விதத்திலும், செடிகொடிகளுக்குத் தீங்கு செய்யக்கூடாது. தொட்டாற் சுருங்கி என்று ஒரு செடி இருக்கின்றது. அதை நாம் தப்பித்தவறித் தொட்டோமானாலும், உடனே அச்செடியானது தன் இலைகளை முற்றிலும் சுருக்கிக் கொள்கிறது. நம்மை ஒருவர் தொடுமுன் நாம் எப்படி நம் தேகத்தைச் சுருக்கிக் கொள்கிறோமோ, அப்படியே அதன் இலைகளும் சுருங்குகின்றன. நமக்கு உயிருள்ள மாதிரியே அதற்கும் உயிருள்ளது. நமக்கு கூச்சம் இருப்பதுபோலவே அதற்கும் கூச்சம் இருக்கின்றது. இவ்விஷயங்களையெல்லாம் அறியாத அநேகம் பிள்ளைகள் ஒரு செடியைக் கண்டால் உடனே வேரோடு பிடுங்கி எறிந்தும், நாய்கள், மாடுகளைக்கண்டால், கல்லெறிந்தும் விளையாடுகிறார்கள். இன்னும் சிலர் தட்டாரப் பூச்சிகளைப் பிடித்து அதன் இறகுகளில் ஒரு ஊசியைச் செலுத்துகிறார்கள். கொசுக்களைத் தட்டியடித்து விடுகிறார்கள். அறியாமல் பாபத்தொழிலைச் செய்யும் அச்சமயம் நான் பார்த்தால், அவர்களுக்குப் புத்தியும் சொல்வதுண்டு. நீங்களும், அறியாமல் குற்றஞ் செய்யும் இவ்விதப் பிள்ளைகளுக்குப் புத்தி சொல்லவேண்டும். அப்படியானால், நீங்கள் எவ்வ

ளவு ஜாக்கிரதையாயிருந்து இக்குற்றங்களைச் செய்யாதொழிக்கவேண்டும்! நீங்கள் குற்றம் செய்வீர்களானால் உங்கள் வார்த்தை மற்றவர்களிடம் ஏறுதல்லவா?

ரிஷிகன்யைகள் தம் ஆச்சிரமங்களில், மான்களைப் பிரியமாய் வளர்ப்பதையும், காலையிலும் மாலையிலும் தம் ஆச்சிரமங்களைச் சுற்றியுள்ள பூங்கொடிகளுக்கும், பாத்திகளுக்கும் தண்ணீர் வார்ப்பதையும், அச்சமயங்களில் பாத்திகளில் தண்ணீர் குடிக்க வந்து உட்காரும் குருவி, புறா முதலிய பக்ஷிகள் திருப்தியடைந்து பறந்து போகுமளவும் அப்பெண்கள் காத்திருந்து, பிறகே மறுபடி தண்ணீர் வார்ப்பதையும் பற்றி அடிக்கடி புராணங்களில் படித்திருக்கிறேன். நம் வீடுகளிலும், சாதாரணமாகப் பசுமாடுகளைத் தெய்வம் போலவே பூஜை செய்கிறோமல்லவா? அவற்றையும் கன்றுக்குட்டிகளையும் நன்றாய்க் குளிப்பாட்டுகிறோம். பசுமாடுகளின் நெற்றியில் மஞ்சளையும் குங்குமத்தையும் இடுகிறோம். ஈசுவரன் நம்மிடமிருப்பது போலவே, மற்ற பிராணிகளிடமுமிருக்கிறார். நாம் ஈசுவரனையறியவேண்டுமானால், மற்ற பிராணிகளை அன்பாய் நடத்த வேண்டும். நம் தமிழ் நாடுகளில், பொதுவாகப் பசுக்களை நன்றாய் வளர்த்துப் பாதுகாக்கின்றார்களில்லை. கன்றுக்குட்டிக்குப் பால் கொஞ்சமும் விடாமல் பசுவினின்றும் பாலைக்கறந்து விடுகிறார்கள். தன் வயிற்றிற் பிறந்த கன்றுக்குப் பாலில்லாமல், பிறருக்கு நிர்ப்பந்தத்தின்மேல் பால் கொடுப்பது, பேச வாயில்லாத அப்பசுக்களுக்கு எவ்வளவு துக்ககரமாயிருக்கும். நெல்லூர் முதலிய தெலுங்கு ஜில்லாக்களில், உள்ளவர்கள் கன்றுகளுக்கு யதேஷ்டமாகப்பாலை ஊட்டி மிஞ்சுவதை தம் உபயோகத்திற்கு எடுத்துக் கொள்வார்கள். இதை வாசிக்கும் உங்கள் வீடுகளில் மாடுகள் இருக்குமானால், அவைகளுக்கு சரியான தீனி கிடைக்கின்றதா; அவைகள் நிற்கும் இடம் சாணி முதலிய குப்பைக் குவியல்கள் இல்லாமல் மிகச்சுத்தமாய் வைக்கப்பட்டிருக்கின்றதா? என்று கவனிக்கக் கடவீர்கள்.

ஐரோப்பியர்கள் அநேகர் தாம் வைத்திருக்கும் குதிரைகளை எவ்வளவு ஸௌகரியமாகவும், பிரியத்தோடும் வளர்க்கின்றார்கள்! தம் பங்களாக்களில் புஷ்பச் செடி ஒவ்வொன்றையும் தம்முடைய

அருமைக்குழந்தையையும்விடப்பெருமையாய்வளர்க்கிறார்கள். பார்ப்பவர்மனதைக் களிப்புறச்செய்யும்படி வளர்க்கிறார்கள். இவ்விஷயத்தைமட்டும் ஐரோப்பியர்களிடமிருந்துநாம்படித்துக்கொள்வோம். "வேட்டை" என்று பெயர் வைத்துக்கொண்டு பிராணிகளைச் சுடுகின்றார்களே, அதை நாம் அவர்களிடமிருந்து படித்துக்கொள்ளவேண்டாம். இன்னும் எத்தனையோ பிராணிகளைக் கொன்று மாமிசங்களைப் புசிக்கிறார்களே, அதை நாம் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டாம். பிறரிடமுள்ள நன்மையை மட்டும் எடுத்துக்கொள்வோம். தீமையைத் தள்ளிவிடுவோம்.

இவ்விதம் நீங்கள் அன்பைப் பூர்ணமாக அடைந்த பிறகு, பிறரையும் உங்களைப் போலவே மதிப்பீர்கள். அப்போது பிறரை ஏமாற்றினால் உங்களையேமாற்றிக் கொண்டவர்களாவீர்கள். அதனால், பொய் சொல்லமாட்டீர்கள். பிறருக்கு ஹிம்ஸை ஏற்பட்டால் உங்களுக்கு ஏற்பட்டதுபோல் நினைப்பீர்கள். அதனால் பிறருக்கு ஹிம்ஸையை உண்டுபண்ணமாட்டீர்கள். பிறர் சுகத்தையடைந்தால் நீங்கள் சுகமாகவிருப்பதாக எண்ணுவீர்கள். அதனால் பிறருக்கு நன்மையையே செய்வீர்கள். அப்போது நம் தேசத்திற்கு கௌரவமான புத்ரர்களாவீர்கள்.

இன்னும் ஓரே விஷயத்தோடு முடித்து விடுகிறேன். இந்த சங்கம் ஆண்பிள்ளைகளுக்கு எவ்வளவு பிரயோஜனத்தைத் தருமோ, அவ்விதமே பெண்பிள்ளைகளுக்கும் பிரயோஜனமுள்ளது. மதுரைப் பெண்களுக்காக ஒரு கிளைச் சங்கம் ஏற்பட்டுள்ளது. இப்போது சுமார் 40 பெண்கள் இச்சங்கத்தைச் சேர்ந்திருக்கின்றார்கள். பிரதி ஞாயிற்றுக் கிழமையிலும் அவர்கள் ஒருங்கே கூடி நல்ல விஷயங்களைப் படித்து வருகிறார்கள். நீங்கள் கேட்ட இவ்விஷயங்களை உங்கள் தாய்மாருக்கும் சகோதரிகளுக்கும் சொல்லி உற்சாகப்படுத்த வேண்டும்.

சென்ற மாசப்பத்திரிகையில் எழுதியுள்ள பிரகாரம் நரேந்திரன், ஸுகந்யையை எவ்விதம் நம் சங்கத்தில் சேர்த்தான் என்பதையும், ஸுகந்யை எவ்விதம் தன் தோழிகள் அநேகருடன் சேர்ந்து பெண்களுக்கென்றே ஸ்வர்ணமணிமாலைக் கிளைச் சங்கம் ஒன்று ஏற்படுத்தினாள் என்பதையும் நீங்கள் ஞாபகத்தில் வைத்து, உங்கள் ஸஹோதர ஸஹோதரிகளுக்கும் ஸ்வர்ணமணி மாலையைப் பற்றிய விவரங்கள் எல்லாவற்றையும் விஸ்தாரமாய்ச் சொல்லுங்கள்.

வஸந்தாநந்தர்.

# தியானக்கிரம விஷயம்.

## மார்ச்சு மாசம்.

(15) நீ மேன்மார்க்கத்தி லடிவைக்க வேண்டுமானல் உன் ஸங்கல்பம் துவைக்கப்பட்ட எஃகு போலிருக்க வேண்டும்.

(16) "நான் ஒரு மநுஷ்யன். ஈசுவரனும் என்னிடமிருக்கிறார்." என்று உனக்குள்ளே சொல்லிக் கொள்.

(17) சித்த ஐகாக்ரியம் (ஏகாக்ரத்தன்மை) என்னவெனில், நீ பிரவேசித்திருக்கும் மார்க்கத்திலிருந்து உன்னை ஒரு நிமிஷங்கூட வேறெவ்விஷயமும் திருப்ப இயலா திருத்தல் வேண்டும்.

(18) எவ்வித மயக்கப் பொருள்களும், உலக சுகங்களும், உலக அபிமானங்களும், உன்னை ஒரு வேளையிலும் இழுக்கக் கூடா.

(19) உன் மநத்தினின்று கர்வத்தை நீக்கு. ஏனெனில் கர்வமே அறிவீனத்தினின்றே வருகின்றது.

(20) உன் விவேகத்தையும் அநுபவஞானத்தையும் உபயோகித்து உன் வாழ் நாட்களை ஒழுங்காக்கிக்கொள்.

(21) (இம்மார்க்கத்தில்) நீ எப்போதும் ஜாக்ரதையாயிருக்க வேண்டும். நீ இல்லாவிட்டால் தவறி விடுவாய்.

(22) நிவிர்த்தி மார்க்கத்திலுள்ளவன் 'தனக்கென வாழான், பிறவுயிரோம்புவன்'.

(23) அவன் பிறர்க்குபகரிப்பதில் தன்னை மறந்தவனாகவிருப்பான்.

(24) இவன் ஈசுவரன்கையில் ஒரு இலேகிணி போலாகிறான்; அதன் வழியாய் அவரது கருத்துப் பிரவேசித்து, இக் கீழுலகில் வெளியாகின்றது; அக்கருத்து ஒரு இலேகிணியின்றி வெளிப்பட முடியாது.

(25) தன் ஹிருதயத்தில் நிரம்பி நிற்கும், ஈசுவரவாத்ஸல்யம், உலகெங்கும் பிரவேசித்துப் பிரகாசிக்க, அவன் ஒரு ஜீவித அக்கினிஜ்வாலை போலும் இருக்கிறான்.

(26) நீ மேன்மார்க்கத்திற்கு ஆயத்தப்பட முயலுகையில் உனது சரீரம் கூர்ந்த உணர்ச்சி யுடையதாக வேண்டியது அவசிய மாகிறது. ஆகையால் ஒரு சப்தம், ஒரு அதிர்ச்சி உண்டானலும் அதன் நாடிகள் எளிதில் சலனப்பட்டுக் கலங்கும், என்ருலும், கூடியவரை முயன்று நீ சரிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(27) சாந்தமடைந்த மநது என்ருல் மநத்தைரியம் என்றும் அர்த்தம், ஆகையால் மேன்மார்க்கத்தில் நேரிடும் கஷ்ட நிஷ்டூரங் களை நீ அச்ச மின்றி யெதிர்க்கலாம். அதற்கு மனவுறுதி யென்றும் இன்னொரு அர்த்தம்.

(28) முற்றிலும் சுசியாயும், ஆரோக்கியமாயும் சரீர மிருந் தால்தான், மேன்மார்க்கத்துக் குரிய கஷ்ட நிஷ்டூரங்களுங் கிணங்க நடந்து, அதன் அதிப்பிரயாசத்தை அதற்கு சகிக்க முடியும்.

(29) நீ அம்மார்க்கத்துடன் ஒருமைப் படவேண்டும். அதா வது அம்மார்க்கத்தை யநுசரிக்க வேண்டிய முறையென்ன என்றும் நீ ஆலோசிப்பதற்குக் கூட அவசிய மேற்படாதபடி, அவ்வளவு மட்டில் அம்மார்க்கத்தைக் கொஞ்சமேனும் வழிபிசகாமல் அநுஸ ரிப்பது உன் ஸ்வபாவமாகவே ஏற்பட வேண்டும்.

(30) அப்படிஆக ஆத்மாவர்கிய நீ தீர்மானித்து விட்டாய். அதிலிருந்து தப்பிப்போவ தென்ருல், உன்னிட மிருந்தே நீ தப்பிப் போகிறதாகின்றது.

(31) நீ எப்பொழுதும் சாந்த முள்ளவனாக விருக்க வேண்டும்.

## ஏப்ரல் மாதம்.

மாசாந்தர அப்பியாசம்:— மேல்பார்வையில் நமக்கு எவ்வளவு தோஷம் தோன்றினும், ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு வஸ்து வினிடமும் இயங்கும் ஈசுவர சைதந்யத்தை யறிந்து கொள்ளக் கற்றுக்கொள்.

## வார அப்பியாசம்.

1-வது வாரம்:—ஸர்வமும் ஒன்ருகையால், ஏகவஸ்துவாகிய ஈசுவரனது சங்கல்பப் பிரகாசம் நடப்பதே எவர்க்கும் சுகமானது.

2-வதுவாரம்:—சத்தியமின்னது அசத்தியமின்னது என்பதை நீ தெரிந்துகொள்; மனோவாக்குக் காயங்களில் எப்பொழுதும் சத்தியவானுயிருக்கக் கற்றுக்கொள்.

3-வது வாரம்:— அநித்தியத்தினின்று நித்தியத்திற்கு வழிகாட்டும். அந்தகாரத்தி னின்று பிரகாசத்துக்கு வழிநடத்தும். மரணத்தினின்று தப்புவித்து அமிருதத்துவத்திற்குக்கொண்டுசேர்ப்பியும்.

4-வது வாரம்:— உன் ஸ்தூல, சூக்ஷ்ம காரண சரீரங்களை; நீ என்று எண்ணாதே.

அவைகள் ஒவ்வொன்றும் தத்தம் இச்சையை அடைய, தான் ஆத்மா தான் ஆத்மா என்று மயக்கும்.

ஆனால்அவைகளின் தன்மையை அறிந்து நீ அவைகளின் யஜமானன் என்றுநிச்சயங் கொள்.

5-வது வாரம்—உபயோகமிது, உபயோகமற்றதிது என்று நீ அறிந்து கொண்டால் மட்டும் போதாது; உபயோகமுள்ளவைகளிலேயே தாரதம்மியத்தையும் (அதாவது எது அற்ப உபயோகமுள்ளது எதுமிகுந்த உபயோகமுள்ளது என்று) நீயறியவேண்டும்.

ஏழைகளுக்கு அன்னமிடுவது மேன்மை பொருந்திய நல்ல உபகாரச்செயல். ஆனால் அவர்கள் சரீரங்களைப் போஷிப்பதைவிட அவர்களுடைய ஜீவன்களை விருத்திக்குக் கொண்டுவருவது மிக்க உபயோகமுள்ள மேலான காரியம்.

பணமுள்ள எவனும் சரீரத்திற்கு உணவளிக்கக்கூடும்; ஆனால் ஞான முள்ளவர்கள்தான் ஜீவனைப்போஷிக்கத் திராணியுள்ளவர்கள்.

நீ அறிவைப் பெற்றால், மற்றவர்களும் அதைப்பெற நீ உதவி செய்வது உனது கடமை.

## தினசரி அப்பியாசம்.

(1) ஸர்வமும் ஒன்றாகையால், ஏகவஸ்துவாகிய ஈசுவரனது ஸங்கல்பப் பிரகாரம் நடப்பதே எவர்க்கும் சுகமானது.

(2) நித்திய நித்ய வஸ்து விவேகத்தை மார்க்கப் பிரவேசமுதல் அதன் முடிவுவரையில், ஒவ்வொரு நாளும் அதன் ஒவ்வொரு படியிலும் அநுபவத்தில் கொண்டுவர வேண்டும்.

(3) அறிவில்லாதவர்கள், ஐசுவரியத்தையும் அதிகாரத்தையும் அடைய முயலுகிறார்கள். இவைகள் எவ்வளவு நீடித்திருந்தாலும், ஒரு ஜன்மத்திற்கு மேற்பட்டிருக்கக் கூடியவைகளல்ல. இவைகள் அநித்தியம், இவைகளைவிட விசேஷித்தவைகள் வேறு இருக்கின்றன. அவைகள், சாசுவதமும் ஸத்யமுமானவைகள். அவைகளை ஒரு முறை பார்த்துவிட்டால், இவைகளை நீ ஒரு பொழுதும் இச்சிக்க மாட்டாய்.

(4) இவ்வுலகிலுள்ள ஜனங்கள் யாவரும் அறிவினர், 'அறிவிலார்' என இருவகைப்படுவர். இதை அறிந்து கொள்வது மிகவும் முக்கியம்.

(5) ஒரு மனிதனது ஜாதியும் மதமும் முக்கியமல்ல; உண்மையில் முக்கியமானது ஈசுவரன் மனிதர்களுக்கு வகுத்திருக்கும் சட்டத்தை அல்லது நியதியை அவன் எம்மட்டு அறிந்து கொண்டிருக்கிறான் என்பதே.

(6) ஜகத்பரிபாக மார்க்கம் அல்லது உலகவிகாஸ முறைவரையப்பட்டிருக்கும் படத்தை ஒரு மனிதன் ஒரு முறை நேரில்பார்த்து உள்ளபடி. அதைத் தெரிந்துகொண்டால், அது மிகவும் சிறப்புற்று மகிமை தங்கி நிற்பதால், அவன் அதற்கிணங்க நடவாமலும், அதனுடன் ஒருமைப்படாமலும் இருக்கமுடியாது.

(7) ஒவ்வொருவனிடத்தும், ஒவ்வொரு வஸ்துவிலும் ஈசுவர விளக்கத்தைபறிய நீ கற்றுக்கொள்! எவ்வளவு தோஷமுள்ளதாய் அவை வெளிப் பார்வைக்குப் புலப்பட்டாலும் பாதகமில்லை. ஈசுவரசைதன்னியம் உன்னிடத்தும் உன் சகோதரனிடத்தும்பொதுவாயிருப்பதால் அதன்வழியே அவனுக்கு நீ உதவலாம்.

(8) சத்தியமின்னது அசத்தியமின்னது என்பதை நீ தெரிந்துகொள்; மனோவாக்குக் காயங்களில் எப்பொழுதும் நீ சுத்தமாயிருக்கக் கற்றுக்கொள்.

(9) ஒரு எண்ணத்தை அநேகம்பேர்கள் ஒரேவிதமாய்க்கொண்டிருந்தாலும் சரி, வெகுகாலமாய் அது நம்பப்பட்டிருந்தாலும் சரி. ஜனங்களால் உத்கிருஷ்டமென்று நினைக்கப்பட்ட புஸ்தகங்களில் அது எழுதப்பட்டிருந்தாலும் சரி இக்காரணங்களால் அதை நீ அங்கீகரிக்கவேண்டியதில்லை. அதை நீயே ஆலோசித்துப்பார்த்து நியாயமானது தானாவென்று நீயே தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

K. S. இராமசந்திர ஐயர்.